சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA.

1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

Telephone: No. 300.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு வைகாசி மாதம் 23-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 19-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### அர்ச். சூசையப்பர் திருநாள்

கொழும்புத்துறைத தாபனத்திலே கோவில்கொண்டு, தம்மை அண்டிவருவாருக்கெல்லாம் அன்புமிக்க ஓர் அடைக்கலப்பிதாவாயிருந்துவருகின்ற தொழிலாளர்களின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பர்திருநாள் இம்மாதம் 26-ந்திகதியாகிய வருகிறஞாயிற்றுக்கிழமை வழமைபோல மிகுந்தபத்திச் சிறப்பாய்க் கொண்டாடப்படும். அன்று காலை 6-30மணிக்குத்திருநாள் பாடற்பூசை நிறைவேறும். சாயங்காலம் 4-30மணிக்கு வேஸ்பர்பாடி முடிந்ததும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்தோடும், திவ்வியசற்பிரசாதஆசீர்வாதத்தோடும் திருநாள்முடிவாகும். இலங்கையின் இரட்சாபிதாவாகிய அர்ச். சூசையப்பரின் திரு அடைக்கலத்திலே யாழ்ப்பாண மேற்றிராசனமுழுவதும் அன்றுதொட்டுப்பகிரங்கமாக நேர்ந்து ஒப்புக்கொடுக்கப்படுவது இப்பதியிலே இத்திருநாளின்போதேயாகும். ஆதலால், அர்ச். சூசைமாதவனின் பக்தர்களெல்லாம் முந்தியவருடங்களிற் போன்று இம்முறையும் அப்பதியிலே பெருந்திரளாகச் சமுகங்கொடுத்துத் தங்கள்மேலும், தங்கள்குடும்பங்கள் மேலும், தங்கள் செல்வநாட்டின் மேலும் அவரின் தவறாத அடைக்கலத்தையும், ஆசீர்வாதத்தையும் இரந்து கொள்வார்களாக!

### அடிப்படைஉரிமைக்கு மாறானது

"சமயஸ்தாபனங்கள் தேவையான இடங்களிலும், நோக்திலும் பாடசாலைகளைக் கட்டும்உரிமையை அரசாங்கம்பறிப்பது, மக்களின்அடிப்படைஉரிமைக்கு மாறானதென்று மொறட்டுவா மகாஜனசபை தீர்மானிக்கிறது" என்றபிரேரணை அச்சபையின் நிர்வாகசம்மிற்றியிலே திரு. அல்பிறெட் பெர்னுண்டோ அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பாடசாலைகளை அரசாங்கத்தின்கீழ் கொண்டுவருமாறு நடவடிக்கை எடுக்கப்படுவதன்விளைவு, கம்யூனிஸ்ட—பாசிஸ்த நாடுகளிலுள்ள நிலைமையையே இங்கும் கொண்டுவருமென்று இப்பிரேரணைபற்றிப்பேசியபோது அவர் குறிப்பிடலாயினர்.

### அரசாங்கமும் பாடசாலைகளும்

"உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளையெல்லாம் தனதுநிர்வாகத்தின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று அரசாங்கத்தால் ஆலோசனை செய்யப்படுகிறது; புத்தசமயபிள்ளைகளுக்குப் புத்தசமயசூழ் நிலையில் கல்வியளிக்கப்பட வேண்டுமென்ற அபிப்பிராயங்கொண்டுள்ளநான் புத்தசமயபாடசாலைகளை அரசாங்கத்திடம் ஒப்படைப்பது ஆபத்தாகுமெனக் கருதுகிறேன்; ஏனெனில், சமயம் மக்களின் அபினென்று கருதும் அரசாங்கம்ஒன்று அதிகாரத்துக்குவருமானால் பிள்ளைகளுக்குச் சமயக்கல்வி அளிக்கப்பட வேண்டுமென்றநம்பிக்கை ஓர்பகற்கனவாகிவிடும்" என்று திரு. எச். டபிள்யு. அமரசூரியா சென்ற 17-ந்திகதியன்று மாத்தறையிலுள்ள ராஹுலகல்லூரிப் பரிசளிப்புவிழாவிற்குத் தலைமைவகித்துப்பேசுகையில் கூறியிருக்கின்றார்.

### வெளியேறிய மாணவர்கள்

கொழும்பிலுள்ள அரசினர் ஆயுள்வேத வைத்தியகல்லூரியிலிருந்து வெளியேறிய 108மாணவர்களும் தொடர்ந்துபடிக்கும்பொருட்டு வருகிறஆனிமாதம்5-ந்திகதி கல்கத்தாவுக்குச் செல்லவிருக்கின்றார்கள். அங்கேஇவர்கள் தொடர்ந்துபடிப்பதற்குவேண்டிய சகலஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

### புதிய ஆயப்பிரயாணசேவை

நயினாதீவு—புங்குடுதீவு ஆயப்பிரயாணசேவை சென்றவெள்ளிக்கிழமை ஆரம்பித்துவைக்கப்படலாயிற்று. இந்தஆயப்போக்குவரத்துச் சேவையாலே நயினாதீவுமக்கள் பெரும்பயன் அடைவார்களெனலாம். நயினாதீவுக்குச்செல்லும் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களுக்கும் இச்சேவை பெரும்உதவியாயிருக்கும். இந்தஆயப்போக்குவரத்தையொட்டித் தற்போது குறிக்கட்டுவான் துறைமுகம்வரை பஸ்போக்குவரத்துச்சேவையும் நீடிக்கப்பட்டுள்ளது.

### சத்தியாக்கிரகிகளின் தலைவர்

சனப்பிரதிநிதிகள்சபை மண்டபத்தில் சென்றஞாயிற்றுக்கிழமை நடைபெற்றவிருந்துக்குச் சமுகமளித்திருந்தவர்களை இந்தியப்பிரதமர்பண்டிதநேருவுக்குப் பிரதமர்பண்டாரநாயகா அறிமுகப்படுத்தி வைத்தார். காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களை அறிமுகஞ்செய்துவைக்கையில், "வடபகுதியிலிருந்து வந்திருக்கும்இவர்தான் சத்தியாக்கிரகிகளின்தலைவர்" என்று திரு. பண்டாரநாயகா கூறினார்.

### கடைசிப் புகையிலைச் சிப்பம்

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் செல்லக்கூடிய கடைசியான யாழ்ப்பாண—மலையாளப் புகையிலைச் சிப்பம் தற்போது இந்தியாவுக்கு அனுப்பப்படுகிறது. சிலதினங்களுக்குமுன் 800கண்டிபுகையிலை அனுப்பப்பட்டது. இன்னும் சிலதினங்களில் 125கண்டிபுகையிலை அனுப்பப்படும். இவ்வளவுபுகையிலையும் மூன்று லட்சம்ரூபா பெறுமதியுடையதென மதிப்பிடப்படுகிறது. வருகிறஆவணி மாதத்திலே முடிவடையவிருக்கும் இலங்கை—இந்திய புகையிலைஒப்பந்தத்தைப் புதுப்பிக்க இலங்கைஅரசாங்கம் இதுவரை யாதொருநடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் இந்தியாவுக்குத் தேவைப்படும் தின் புகையிலையைச் செய்கைபண்ண வேண்டாமென்று யாழ்ப்பாண—மலையாளப் புகையிலைவிற்பனவுக் கூட்டுறவுச்சங்கம் தனதுஅங்கத்தவர்களுக்கெல்லாம் [illegible]கிறது. இந்தியாவுக்குஅனுப்பப்படும் புகையிலையைச் செய்கைபண்ணிப் பதப்படுத்துவதில் யாழ்ப்பாணக் குடாநாட்டைச்சேர்ந்த 25,000பேர் ஈடுபட்டிருக்கிறார்கள்.

### மாமியைவெட்டிய மருமகள்

கம்பளையைச்சேர்ந்தவளும், மூன்று பிள்ளைகளுக்குத்தாயுமான உக்குஎன்னும்பெண் தனதுமாமியாரை 29தடவை கத்தியால்வெட்டிப் படுகாயப்படுத்தியதாகவும், தனதுமைத்துனியைப் 11 இடங்களிலே கத்தியால் பலமாகவெட்டிக் காயப்படுத்தியதாகவும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்கு கம்பளைநீதிஸ்தலத்திலே சென்ற17-ந்திகதி விசாரணை செய்யப்பெற்று, எதிரி குற்றவாளியாகி ஆறுமாதக்கடுங்காவல்தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றாள்.

### தீவுபகுதியும் புகையிலையும்

தீவுபகுதியில் இம்முறை புகையிலை விளைவு மிகவுங்குறைவாகக் காணப்படுகிறது. சிலஇடங்களில் தான் பெரியபுகையிலைஉண்டு. அதிகமாக ஒருமட்டரகமான புகையிலைதான்இம்முறை கிடைத்திருக்கிறது. இதற்குக் காரணம் தைமாதத்தின்பின் மழை பெய்யாமையேயாகும். புகையிலை வெட்டிஉலர்த்தப்பட்டதும் வியாபாரிகள் அதனைவாங்கிவருகிறார்கள். நல்லதிறமானபுகையிலை ஆயிரம் 220 ரூபாவரை விலைப்படுகிறது. ஆவணிக்குமுன் புகையிலையைவிற்பதில் கமக்காரர் கருத்தாயிருக்கின்றார்கள்.

### சீனச்சீமேந்து

சீனாவிலிருந்து முதன்முதலாக இலங்கையில் சீமெந்துவந்து இறக்குமதியானதிலிருந்துஉள்நாட்டுச்சீமெந்தின்விலை கொழும்பிலே 10ரூபா 50 சதமாக இறங்கியுள்ளது. சீனச்சீமெந்து வந்துசேருமுன் உள்நாட்டுச்சீமெந்து கூடியவிலைக்கு விற்பனையாகிவந்தது. கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனம் இறக்குமதிசெய்துள்ள சீனச்சீமெந்து உயர்ந்தரகமானதென்றும், மொத்தமாகஓர் மூடை 9ரூபா 30சதமாகவும், சில்லறையாக 9ரூபா 60சதமாகவும் விலைப்படுகின்றது.

### துக்கங்கொண்டாடுந்தினம்

"சிங்களம்மட்டும்" சட்டம் சனப்பிரதிநிதிகள்சபையில் கொண்டுவரப்பட்ட தினமாகிய ஆனிமாதம் 5-ந்திகதியை ஓர்துக்கதினமாகக் கொண்டாடுவதென்று அகில—இலங்கைத் தமிழ்ப்பேசும் வாலிபமுன்னணியைச் சேர்ந்த யாழ்ப்பாணக்கிளையின் நிர்வாகச்சபைஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. இதனைநிறைவேற்றுவதிலே ஒத்துழைக்குமாறு தமிழரசுக் கட்சி, லங்கா சமசமசமாஜகட்சி, திராவிடமுன்னேற்றகழகம் ஆதியவற்றைக் கேட்டுக்கொள்வதென்றும் அதுதீர்மானித்திருக்கிறது.

### வெலிமடைத்தேர்தல் வழக்குஅப்பீல்

சென்றபொதுத்தேர்தலிலே வெலிமடைத்தொகுதிப் பிரதிநிதியாகத் தெரியப்பட்ட திரு. கே. எம். பி. இராஜரத்தினவின்தேர்தல் முறைகேடானதென்று சுப்பிறீங்கோடு அளித்திருந்த தீர்ப்பை அவர் ஆட்சேபித்துச் செய்திருந்தஅப்பீலைச் சென்றதிங்கட்கிழமை மூன்றுநீதியரசர்கள் விசாரணைசெய்து தள்ளிவிடலாயினர். நீதியரசர்புள்ளே, நீதியரசர் எச். என். பெர்னுண்டோ நீதியரசர் சன்சோனிஆகியமூவருமே அப்பீலை விசாரணைசெய்தார்கள்.

### ஜப்பானியபிரதமரின் விஜயம்

ஜப்பானியபிரதமர்நொபுசுக்கிகிஷி அவர்கள் இம்மாதம் 28-ந்திகதிசெவ்வாய்க்கிழமைமாலை விசேஷஜப்பானிய விமானம்ஒன்றில் இலங்கை வந்துசேரவிருக்கின்றார். இலங்கைக்குவிஜயஞ்செய்யும் முதலாவது ஜப்பானிய பிரதமர்இவரே. இவருடன் பதினொருபேர்அடங்கிய கோஷ்டி ஒன்றும் வருகின்றது. ஜப்பானுக்கும், இலங்கைக்குமிடையே பரஸ்பர நல்லெண்ணத்தையும், சிநேகஉறவையும் அதிகப்படுத்துவதே ஜப்பானிய பிரதமர் இலங்கைக்கு விஜயஞ்செய்வதின் நோக்கமாகும்.

### சீனிதயாரிக்கும் பயிற்சி

பதநீரிலிருந்து சீனி தயாரிக்கும் குடிசைக்கைத்தொழிலிலே பயிற்சி பெறுவதற்காக மாதர்சங்கங்கள் பலவற்றின் பிரதிநிதிகளான இருபது இளம்பெண்கள் பொலிகண்டிப் பனம்பொருள் ஆராய்ச்சிநிலையத்தில் சென்ற 17-ந்திகதியன்று ஒன்றுகூடினர். இவர்களுக்கெல்லாம் அன்று முழுவதும் பயிற்சியளிக்கப்பட்டது. பதநீரைப் பாணியாக்கி மத்திய தொழிற்சாலைக்கு அனுப்புகிறவரையிலே செய்யவேண்டியவேலைகளைக் குடிசைக்கைத்தொழில்முறையில் செய்வதே இவர்களுடையபயிற்சியின் நோக்கமாகும். கோப்பாய், நீர்வேலிவடக்கு, நீர்வேலிதெற்கு, உரும்பராய், அச்செழுமுதலாம் கிராமங்களிலுள்ள மாதர்சங்கங்களின் பிரதிநிதிகளான இவர்கள் கோண்டாவில் கிராமாபிவிர்த்தித் தொண்டர்பயிற்சிநிலையத்தில் இம்மாதம் 3-ந்திகதிமுதல் சமூகநிர்வாகம்பற்றிய ஆராய்ச்சிகளும், பன்னவேலை, தையல்வேலை, சேலைகளுக்குச் சாயமூட்டுதல், அச்சுக்குத்துதல், பலவிதஉணவுகள் தயாரித்தல், பழமரக்கன்றுகள் ஒட்டுதல் முதலியவற்றிலே பயிற்சிபெறுவதில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இவர்களெல்லாம் இருபதுவயதுக் குட்பட்டவர்கள். எல்லோருமே சிரேஷ்டவகுப்புத் தராதரப்பத்திரம் பெற்றவர்கள். பயிற்சிகாலத்தில் இவர்களுக்குஏற்படும் உணவுச்செலவு முதல் பிரயாணச்செலவு ஈறாகவுள்ள சகலசெலவுகளையும் அரசாங்கமே பொறுத்துவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவானவர் யார்?

குருவானவர்என்றால் கண்கண்ட தெய்வம். கடவுள்மீது கொண்ட அன்பால் அவரின் ஆன்மஆவலைத் தீர்ப்பதற்காகத் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும்மறந்து, உற்றார்பெற்றோரையும் துறந்து, சேவையையே செயலாகவும், அன்பையே உயிராகவும், ஆன்மஈடேற்றத்தையே தமதுவேட்கையாகவுங்கொண்டு தம்மை முழுவதும் அர்ப்பணஞ் செய்து செயல்படுபவரே குருவானவர். தமக்கென வாழாது, பிறர்க்கென்வாழ்பவரே குருவானவர். குருப்பட்டமானது மிக மேன்மை பொருந்தியது. இவ்வந்தஸ்துக் கிணையானது வேறெதுவுமே கிடையாது. சம்மனசுகளுக்குமுதலாய் இப்பாக்கியம்கொடுக்கப்படவில்லை. குருவானவர் மற்றொருகிறீஸ்துநாதர். இதற்குமேல் அவரின் மேன்மையைப்பற்றி யாதொன்றும் கூறுவதற்கில்லை.

நாம் நமதுதாயின்வயிற்றில் சென்மித்ததிலிருந்து நம்முடையமரணபரியந்தம் — ஏன் மரணத்திற்குப்பின்னுங்கூட நமக்குஉதவிபுரிகிறார் குருவானவர். பிரசவவேதனைவேளையில் நம்தாயைமந்திரித்துத் தாயுஞ்சேயும்சுகமாயிருக்கக் கடவுளைப்பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறார். பேய்க்கடிமையாய்ப் பிறக்குங்குழந்தையை ஞானஸ்நானத்தினால் கடவுள்குழந்தை யாக்குகிறார். குழந்தைப்பருவத்திலிருந்தே ஞானப்பாலையருந்தி, ஞானத்திலேஊறி, ஞானத்திலேவளர்ந்து, பக்தியிலும்,புத்தியிலும், புஷ்டியிலும் விருத்தியடையக் கத்தோலிக்க கல்விச்சாலைகளை வைத்துநடத்துகிறார். பாலியவயதிலே ஆன்மஉணவாம் தெய்வீகநற்கருணையைக் கொடுத்து நம்மைக் குட்டித்தெய்வங்கள் ஆக்குகிறார். தவறுபவரைத் தட்டித்தடவி, அசைத்துஅணைத்துப் பாவசங்கீர்த்தனத்தினால் பரிசுத்தப்படுத்துகிறார். வாலிபவயதடைந்ததும், வாழ்க்கைப் பிரச்சினையால் மனம் சோர்வுற்றிருப்பவர்களுக்குத் தக்கவழிவகுத்து வாழ்க்கையைவளமாக்க ஆவனசெய்கிறார்.

இல்லறவாழ்க்கையில் கடவுள்போல் கடவுள்முன்னிலையில் இருவரையிணைத்து மெய்விவாகத்தை நடத்திவைக்கிறார். துறவறவாழ்வுக்காகக் கன்னியர், சந்நியாச, குருமடங்களுக்கு அனுப்பிவைக்கிறார். வியாதிவேளையில்வந்து அவஸ்தைப்பூசுதலால் நமதபாவங்களை மன்னித்து ஆறுதலளித்த, ஆற்றித்தேற்றுகிறார். பயங்கர அருவருப்பான வைசூரி, வாந்திபேதி, விஷக்காய்ச்சல், குஷ்டம், பெற்றோரும், உற்றோரும், மனைவிமக்களுமே கைவிட்டோடும் நோய்களிலுங்கூடப் பெற்றதாயிலும் உற்றதாயாய் இருந்து ஆவன தந்து உதவுகிறார். மரித்தால் மந்திரிக்கப்பட்ட கல்லறையில் பிரேதத்தை அடக்கஞ்செய்கிறார். பிறகும் இறந்தவரின் ஆத்துமஇளைப்பாற்றிக்காகத் திவ்விய பூசைகள்செய்து செபிக்கிறார். நமது மனக்கஷ்டங்களை மாற்றி மனநிம்மதிதரும் சிநேகிதர் அவர். ஆன்மநோயைஅகற்றி அதற்குத்தகுந்த அவுழ்தந்தரும் ஆத்தும வைத்தியர் அவர். ஆறுதலற்றோர் ஆறுதலடையும் புகலிடம் அவர். தெரியாதவிஷயங்களைத் தெளிவித்துச் சந்தேகங்களை நிவர்த்திசெய்யும் உபாத்தியாயர்அவர். நமதுஇடுக்கண்களை நீக்கி மனப்பளுவைப்போக்கும் பெருந்தகையாளர் அவர். அனாதைகளுக்கு ஆதரவுஅவர். ஆபத்தில்உதவும் ஆப்தநண்பன் அவர். இரகசியத்தைப்பாதுகாக்கும் உடைபடா முத்திரை அவர். அண்டிவந்தவர்களை அரவணைக்கும் அப்பன்அவர். அனைத்தையும் பரித்தியாகஞ்செய்யும் பெருந்தியாகிஅவர். இல்லையென்று வந்தவர்க்கு இல்லையென்றுசொல்லாது கொடுக்கும் வள்ளல்அவர். சமாதானத்திற்காகப் பாடுபடும் சம்மனசு அவர்.

குருமார் உலகத்தைத் துறந்தாலும் உலகத்திலே வாழவேண்டும். தனித்திருந்தாலும் சனங்களோடே வாழவேண்டும். பரிசுத்தராயிருக்கவேண்டும். பாவஅசுத்தங்களைக் கேட்கவேண்டும். பாவத்தை வெறுக்கவேண்டும். பாவியைச் சிநேகிக்கவேண்டும். பாவத்தைப் பகைக்கவேண்டும். பாவிகளோடு புழங்கவேண்டும். அன்புசெலுத்தவேண்டும். பதிலாக அவதூறுகளைக் கேட்கவேண்டும். உபகாரம்செய்யவேண்டும். உபத்திரவத்தை ஏற்கவேண்டும். "மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார், எவ்வெவர் தீமையும்மேற்கொள்ளார், செவ்விஅருமையும் பாரார், கருமமே கண்ணாயினர்" என்பதற்கொப்ப நமதுநன்மைக்காகவே ஓயாதுஒழியாது, சாயாதுசலியாது உழைத்து உடல்களைக்கும் அவர் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பது நமது இரட்சணியமும், சிறிது அன்புமே. ஆனால், அந்தோ! இக்காலத்தில் இது குதிரைக்கொம்பு. மக்களோடு மக்களுக்காக மக்களில்ஒருவராக மரணமட்டும் வாழ்கிறார். சகலருக்கும் சகலத்திலும் சகலமுமாயிருக்கிறார் பிரதிநன்றி......

அவர் தமதுமக்களை நல்வழிப்படுத்துவதற்காகத் தமதுஆத்தும சாங்கோபாங்கத்திற்கு இடைஞ்சலாயிருக்கக்கூடிய சமூகஅலுவல்களையும் செய்யவேண்டியிருக்கிறது. உயிரைக்கொடுத்தேனும் உத்தமராய்வாழமுயலுங்குருமாரை இக்காலத்தில் எத்தனைமேடைப்பேச்சுகள், எத்தனைபத்திரிகைகள், எத்தனை துண்டுப்பிரசுரங்கள், எத்தனை சுவர்எழுத்துகள் இகழ்கின்றன. இந்த இகழ்ச்சிக்குக்காரணம், அவரின்மக்களாகிய நாமே. அவரின்சேவைப்பலனை அனுபவிக்கும்நாம், அவரால் இரட்சணியம் அடையவேண்டியநாம், அவரால் நேசிக்கப்படுகிறநாம், அவரால் ஆதரிக்கப்படுகிறநாம் அவரைத்தூற்றுகிறோம். என்னே! நமது நன்றிகெட்டதனம். ஆயிரக்கணக்கான தமதுமக்கள் அனைவரையும் சகலவிஷயத்திலும் திருப்திப்படுத்துவது சாத்தியமான காரியமல்ல. கடவுளையே குறைகூறிய உலகம் குருவானவரைச் சும்மா விடுமா?

குருமாருக்கு நம்மேல் உரிமையும், கடமையுமுண்டு. நாம் தீயவழிசெல்லும்போது நம்மைத்திருத்திப் புத்திகூறிச் சட்டதிட்டமேற்படுத்திக் கண்டித்துத் தண்டித்து நம்மைக்காக்கவேண்டும், அணைக்கவேண்டும், அடிக்கவேண்டாமென்பார் சிலர். கண்காணிக்கவேண்டும், கண்டிக்கவேண்டாமென்பார் பலர். இது தவறு. அணைப்பது ஒருகை, அடிப்பது மறுகையாய்இருக்கவேண்டாமா? எம்நாட்டிலே சர்வ அதிகாரம் கடவுளால் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், சகலத்திலும் சகலருக்கும் சகலமுமாய் இருக்கவேண்டியவர் அவர். இதனை உணர்ந்து இதற்குத் தகுந்தவாறுநடந்து இன்புற்றிருப்போம்.

நமது கடமையென்ன? அன்புக்கன்புசெய்யவேண்டும். வயதில்முதிர்ந்தோர் தமதுபேரனைப்போலும், நடுத்தரமானோர் தமதுசகோதரனைப்போலும், வாலிபர் தமது தகப்பனைப்போலும், சின்னஞ்சிறுவர் தமதுதாத்தாவைப்போலும் குருவானவரை நேசிக்கவேண்டும். சுவிசேஷத்தைப் போதிப்பவர் சுவிசேஷத்தால் சீவிக்கவேண்டும். நமது ஞானமேய்ப்பர்களுக்கு நம்மாலான உதவிசெய்யவேண்டும். குருமாரைப் போற்றவேண்டும், புகழவேண்டும்,வாழ்த்தவேண்டும், வளர்க்கவேண்டும், பூசிக்கவேண்டும், போஷிக்கவேண்டும், அவர்களுக்காகச் செபிக்கவேண்டும், அவர்களோடு செபிக்கவேண்டும், அவர்களுக்காக உழைக்கவேண்டும், அவர்களோடு ஒத்துழைக்கவேண்டும். "குருதோஷம் குலநாசம், குருசொல்லுக்கு மறுசொல்லில்லை, குருவாக்குத்திருவாக்கு" என்னுங் கத்தோலிக்க பழமொழிகளை நமது இருதயத்தில் ஆழமாகப்பதிப்போம், அதற்கிசைய நடப்போம், ஆண்டவன் அருள் சம்பாதிப்போம். குருமார் என்றும்வாழ்க! குருமார்எண்ணம்வளர்க!

# "ஆ, யேசுக்கிறீஸ்துவே! ..."

"உனது தெய்வீகபத்தாவின் நந்தாவனத்திலிருந்து எனக்குச் சிலபழங்களும், ரோசாப்பூக்களும் அனுப்பிவை" என்றான் தெயோபிலுஸ், தலைவெட்டப்படுவதற்காக அழைத்துச்செல்லப்பட்ட தொரோத்தேயம்மாளைப்பார்த்து. அவளைக்கேலிபண்ணும்தோரணையில் அவ்வாறுசொன்னான் அவ்வாலிபன். தொரோத்தேயம்மாள் இளம்பிராயமுள்ளபெண். கிறீஸ்துவேதத்தை மறுதலிக்கச்செய்வதற்காக அவள்மீது அதிகாரிகள்எடுத்த நடவடிக்கைகளைப் பார்ப்பதற்காகக் கூடியிருந்த ஏராளமான நகர்வாசிகளுள் தெயோபிலுஸ் என்பவனும் ஒருவன். "அழகிற்சிறந்த இந்தப்பெண்மணி இந்தப்பாழும் அந்நியவேதத்தில் விழுந்திராவிட்டால் நான் இவளை மணந்திருக்கலாமே" என்று அங்கலாய்த்த வாலிபர்களில் இவனும் ஒருவனாயிருத்தல்கூடும். எல்லாம் முடிந்துவிட்டது. அவள் எந்த வேதனைக்கும், சித்திரவதைக்கும் அஞ்சாமல், "நான் கிறீஸ்துவுக்கே சொந்தமானவள்; அவருடன் ஐக்கியமாகவே காத்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டாள். அங்குகுழுமியிருந்த வாலிபர்களுக்குப் பரிதாபம் ஒருபக்கமென்றால், ஆத்திரம் மறுபக்கம்பொங்கியது. முணுமுணுவென்று பலபேர் பலவிதமாகப் பேசிக்கொண்டிருந்தனர். தெயோபிலுஸோவெனில் மேற்கூறியவாறு உரத்தசத்தமாகக் கூறினான்.

"தாங்கள் கோரியவாறே அனுப்பிவைக்கிறேன்" என்று விடையளித்தாள் தொரோத்தேயம்மாள்.

கொலைஞன் அவளுடையகழுத்தை வெட்டுவதற்குமுன் அவள்தரையில் முழந்தாட்படியிட்டுச் செபிக்கிறாள். உடனே அங்குதிடீரென ஒருகுழந்தை தோன்றுகிறது. பூக்களோ, பழங்களோ பார்க்கமுடியாதகாலமாகிய அந்த மாசிமாதத்தில் அந்தக்குழந்தை பார்ப்பவர்களின்வாயில் சலம்ஊறத்தக்கவகையில் அமைந்திருந்த மூன்று கனிகளையும், அன்றுமலர்ந்த அழகியரோசாப்புஷ்பங்களையும் வைத்திருந்தது. அக்குழந்தை நேராகத் தெயோபிலுஸ் இருந்த இடத்தையணுகி, "தொரோத்தேயம்மாள் உங்களுக்குக்கொடுப்பது" என்றுசொல்லி அவற்றை அவ்வாலிபனிடம் சமர்ப்பித்தான். தெயோபிலுஸும் "ஆ! யேசுக்கிறீஸ்துவேஉண்மையானதெய்வம்" என்று கத்தினான். தொரோத்தேயம்மாள் தலைவெட்டப்பெற்றுப் பத்து அல்லதுபன்னிரண்டு மணிநேரம்ஆவதற்குள் தெயோபிலுஸும் வேதசாட்சியாக மரித்தார். தொரோத்தேயம்மாள் ரோமைச்சாம்பிராச்சியத்தின் ஒருபகுதியாகிய கப்பதோஸியாவில் செசாரெயாநகரில் பிரபுவம்சத்தில் பிறந்தவள். இவள் கிறீஸ்துவபுண்ணியங்களிற் சிறந்துவிளங்கிவந்ததால் இவளைப்பற்றியசெய்திகள் வெகுசீக்கிரத்தில் அதிகாரிகளின் செவிக்கெட்டின. இவள்கைதுசெய்யப்பட்டு நீதிபதிமுன் கொண்டுபோகப்பட்டாள்.

"நமதுதேவர்களுக்குப் பலியிடவேண்டுமென்று கட்டளையிட்டோமே; நீஏன் அக்கட்டளையை மீறினாய்?"

"ஏகதேவனாகிய மெய்யானதேவனை மட்டுமே நான்ஆராதிக்கிறேன்."

"நான் சொல்வதைக்கேள்: நமது தேவர்களுக்குப் பலியிடு. நீ மரப்பரியில்* ஏறாமல் தப்பிப்பதற்கு அதுவொன்றேவழி."

"மரப்பரியின்வேதனைகள் கொஞ்சநேரமே நீடிக்கமுடியும். அவற்றால் நான் நித்தியவேதனைகளைத் தவிர்ப்பேன்."

நீதிபதி பயமுறுத்துவதற்காக மரப்பரியின்மீது அவளைக்கிடத்துமாறு கட்டளையிட்டான். சேவகர்கள் அவளை மரப்பரியில்கிடத்தியபோதிலும், அதிலுள்ள வதைக்கும்கருவிகள் இயங்காமல்இருப்பதைக்கண்ட தொரோத்தேயம்மாள் "ஏன் தாமதப்படுகிறீர்கள்? நான்கிறீஸ்தவள். நான்யாருக்காக இந்தவேதனைகளையும், மரணத்தையும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளுகிறேனோ அவரைப்பார்க்க ஆவலாய்இருக்கிறேன்" என்றாள்.

"நீ பார்க்கவிரும்புவது யார்?"

"தேவனின்குமாரனை கிறீஸ்து."

"இந்தமுட்டப்பேச்சுகளை விட்டொழி. நமதுதேவர்களுக்குப் பலியிடு. நீ சந்தோஷமாக வாழ்ந்திருப்பாய்."

"பொய்த்தேவர்களுக்கு நான்ஒருபொழுதும் பலியிடேன். நான் கிறீஸ்துவின்பத்தினி. மோட்சலோகத்தில் அவருடன்ஐக்கியமாக ஆவலுடன்காத்துக்கொண்டிருக்கிறேன்"

இத்தருணத்தில் நீதிபதிக்கு ஒரு யுக்திதோன்றுகின்றது. மரணத்திற்குப் பயந்து சமீபத்தில் கிறீஸ்துவேதத்தை விட்டுவிட்ட இரண்டுநிர்ப்பாக்கிய ஸ்திரிகளிடம் தொரோத்தேயம்மாளை ஒப்படைக்கிறான். இவர்கள் அவளுடைய விசுவாசத்தைக்குலைக்கப் பலவகையிலும்முயலுகின்றனர். அவளோ எதற்கும்அசையவில்லை. விசுவாசத்தில் அதிகஸ்திரமாக ஊன்றிநின்று அந்த இருபெண்பிள்ளைகள்செய்த துரோகத்தின் ஈனத்தன்மையை அவர்கள்உணரச்செய்தாள். அவர்கள் மிகமனஸ்தாபப்பட்டு மீண்டும் திருச்சபையில் சேர்ந்தனர். இச்செய்தியைக் கேட்ட நீதிபதிகோபாவேசங்கொண்டு அவ்விருவரையும் சிரச்சேதம்செய்வித்தான்.

தொரோத்தேயம்மாளை மீண்டும் கொண்டுவந்து மரப்பரியில் கிடத்தினர். அதிலிருந்த வேதனைக்கருவிகள் ஒவ்வொன்றாக இயக்கப்பட்டன. அவளோ "நான் என் வாழ்நாளில் இன்றைக்கிருப்பதுபோல் அவ்வளவு சந்தோஷமாக வேறெந்தநாளிலும் இருந்ததில்லை. ஏனெனில், பிசாசுகளால் கைப்பற்றப்பட்ட இரண்டு ஆத்துமங்களை இன்று கிறீஸ்துநாதரிடம் கொண்டுவந்துசேர்த்தேன்" என்று தனது வேதனைகளின்நடுவே கூறுவாளாயினள்.

இறுதியில்சேவகர்கள் அவளை வாளால்வெட்டிக் கொன்றனர். 'யேசுவே என்னை உமதுமோட்சலோக நந்தாவனத்திற்கு அழைத்துக்கொண்டதற்காக நன்றிசெலுத்துகிறேன்' என்று கூறியவண்ணம் உயிரைவிட்டாள்.

(*'மரப்பரி' அல்லது 'மரக்குதிரை' என்பது பூர்வீகரோமையர் பெரியகுற்றவாளிகளை வதைப்பதற்கு உபயோகித்து வந்த பலவித சித்திரவதைக் கருவிகளுள் ஒன்று. முதல் மூன்றுநூற்றாண்டுகளில் ரோமைஇராச்சியத்தில் கிறீஸ்துவேதத்தை அழிப்பதற்கு முயற்சிகள் எடுத்துவரப்பட்டபோது கிறீஸ்தவர்களை இம்சிப்பதற்கு இந்தக்கருவிகளெல்லாம் உபயோகிக்கப்பட்டுவந்தன. மற்றும்பல கிறீஸ்தவர்கள் துஷ்டமிருகங்களுக்கு இரையாயினர்.)

---

● வொலிஸ்பேர்க்நகர் மேற்குஜேர்மனியில் உள்ளது. இதனைக் கோவில்களேஇல்லாமல் ஓர்நாஸிய மாதிரிநகராக அமைக்கக் ஹிற்லர் திட்டம்போட்டிருந்தார். ஆனால், இப்போது அந்நகரிலே இரண்டாவது கத்தோலிக்க கோவில் திறக்கப்பட்டிருக்கிறது.

● பரிசுத்த பாப்பரசருக்கு இம்முறைஅருளப்பட்ட மகாப்பெரிய பிறந்தபெருநாள் அன்பளிப்பு, ரோமாபுரியில் நவமாகக்கட்டப்பெற்ற ஓர்ஆஸ்பத்திரியாகும். இது அவர் பெயர்கொண்ட ஆர்ச். ஈயூஜினியாரின் நாமத்தைத்தாங்கியது. அவர்பிறந்த பெருநாளன்றுதானே இது முறைப்படி திறந்துவைக்கப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### நாடுதிரும்பும் போலிஷ்காரர்

போலிஷ்-சோவியற் ருஷியஅரசாங்கங்களிடையே ஏற்பட்டுள்ள ஓர்உடன்படிக்கையின் விளைவாகச் சுமார் இரண்டுலட்சம் போலிஷ்காரர் சைபீரியாவின் அடிமைத்தொழில் முகாங்களிலிருந்தும், ருஷியாவிலுள்ள மற்றுந்தூரமான இடங்களிலிருந்தும் போலாந்துக்குத் திரும்பவிருக்கின்றார்கள். அங்குதிரும்பவிருக்கின்ற இவர்களுக்கு உதவிசெய்வதற்கானஆயத்தங்களைப் போலாந்திலுள்ள கத்தோலிக்கஸ்தாபனங்கள் செய்துவருகின்றன. இவர்கள் மாதந்தோறும் 10,000 பேர்முதல் 15,000பேர்வரையிலே திரும்புவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

### வத்திக்கானும் இஸ்ருயேலும்

வத்திக்கானுக்கும், யூதர்களின் நாடாகிய இஸ்ருயேலுக்குமிடையே இராசீயஉறவு ஏற்படுத்திக்கொள்ளும்விஷயமாய்ப் பரிசுத்தஸ்தானம் எந்தவிதமான தகவலுமே இதுவரை வெளியிடவில்லையென்று விசேஷதிருச்சபைக்கருமங்களின் திருச்சங்க காரியதரிசியான சமோர் அதிமேற்றிராணியார் தெரிவித்திருக்கின்றார். இது சம்பந்தமான இருஅறிக்கைகளுக்குப் பதில் அளிக்குமுகமாகவே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவற்றில்ஒன்று, மத்தியகிழக்குத் தகராறுகள் முடிவடைந்தபின்னரே வத்திக்கான் - இஸ்ருயேல் இராசீய உறவுகள் முறைப்படி ஏற்படுத்தப்படுமெனத் தெரிவித்தது. மற்றொன்று, எந்தவிதமான இராசீயதூதுவரையும் வத்திக்கானோடு பரிமாறிக்கொள்ளுமுன் தனதுநாட்டின் எல்லைக்குட்பட்ட பரிசுத்தஸ்தலங்களை இஸ்ருயேல் சர்வதேசமயமாக்க வேண்டியதாகுமென்று பெயர்வெளிவராத வத்திக்கான்அதிகாரிஒருவர் கூறியதாகத் தெரிவித்தது.

### பத்துலட்சம் திவ்வியபூசைகள்

சகலவரப்பிரசாதங்களினதும் மத்தியஸ்தியாகிய பரிசுத்த தேவதாயாரின் கருத்துக்களுக்காகவும், அத்திருத்தாயாருக்குரிய மகிமைச்சுதந்திரம்ஓர் விசுவாசசத்தியமாக விரைவிலே நிர்ணயிக்கப்படும்படியாகவும் பத்துலட்சம் திவ்வியபூசைகளை ஒப்புக்கொடுக்கும் இயக்கம்ஒன்று பிறேசில்நாட்டிலே யேசுசபையைச் சேர்ந்த வண. வலே சுவாமியாரால் ஆரம்பிக்கப்படலாயிற்று. இந்த இயக்கத்தின்விளைவாகச் சென்ற தை மாதம்வரை 3 லட்சத்து 45 ஆயிரம் பூசைகள் நிறைவேறியிருக்கின்றன. தற்போது உலகமுழுவதும் பரந்துள்ள இந்தத்திவ்விய பூசைப்படையணியின் தலைமைஸ்தானம் அயர்நாட்டின் தலைப்பட்டணமாகிய டபிளின்நகரிலே இருந்துவருகின்றது. இது குருமாருடன் ஒழுங்குசெய்யப்பட்ட பூசைகளையும், நிறைவேறியபூசைகளையும் பதிவுசெய்துவருகின்றது. இந்தப்பூசைகளும், அவற்றிற்குப் பணம்உதவியவர்களின் நாமங்களும் வெள்ளேட்டுப்புத்தகங்களில் பதியப்பெற்றுக் கடைசியாகஅவைகள் தேவதாயாரிடம் ஒப்புவிக்கும்படியாகப் பாத்திமாவுக்கும், பின்னர் பரிசுத்தபிதாவுக்குச்சங்மானிக்கும்படியாக றோமாபுரிக்கும் கொண்டுபோகப்படும். இந்தப்படையணியிலே கருதினல்

மாரும், அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும், குருமாரும், சகல வகுப்புகளையுஞ்சேர்ந்த சாதாரண கத்தோலிக்கரும் பங்குபற்றியிருக்கின்றார்கள்.

### தோமையார் கட்டியகோவில்

அப்போஸ்தலரான அர்ச். தோமையாரால் கி. பி. 53-ம்ஆண்டு கட்டப்பட்டதென நம்பப்படுகின்ற கோவில்ஒன்றின் இடிகரையானபாகம் கோட்டையத்திலிருந்து தென்கிழக்கே 35மைல் தூரத்திலுள்ள பெருநாத்னுமிடத்தில் கண்டறியப்பட்டிருக்கிறது. அத்துடன் பழையகல்லறைகளும், ஓர்சிலுவையின் அத்திவாரமும்இருக்கக் காணப்பட்டன. பாரம்பரியம்கூறுகிறபடி, அர்ச். தோமையார் தென்னிந்தியாவில் வந்துசேர்ந்து, பிராமணர்ஒருவரால் கொலைசெய்யப்படுமுன் அங்கே கிறீஸ்துவேதத்தைஅடியிட்டார். கத்தோலிக்கரையே பெரும்பான்மையினராகக்கொண்டு தற்போது அங்கு வசிக்கின்ற இருபதுலட்சம் கிறீஸ்துவர்கள்எல்லோரும் அர்ச். தோமையாரால் மனந்திருப்பப்பட்டவர்களின் சந்ததியினரேயென்று உரிமைபாராட்டுகின்றார்கள். இந்தஇடிகரையான பாகம் உள்ளபடியே அர்ச். தோமையாரால்கட்டப்பட்ட நிலக்கல்கோவிலினுடைய தென்றும், அதுநெடுங்காலமாகத் தேடப்பட்டுவந்ததென்றும் இந்தியபிரிவினைச்சபைச் சிரியகிறீஸ்துவர்களின்தலைவர் கூறுகின்றார்.

### பாப்பரசர் லூர்துபதி செல்வாரா ?

பாப்பரசர் லூர்துபதிக்குப் போகக்கூடுமென்ற வதந்தியானது றோமாபுரியிலே வெகுவாக அடிபட்டுக்கொண்டிருக்கிறது. ஆனல், இதுவிஷயமாய் அதிகாரபூர்வமான ஊர்சிதம் பற்றியஓர் குறிப்புரைதானும் இதுவரை இல்லை. பிரான்சிய கத்தோலிக்கரின் விருப்புக்கிசைந்து, லூர்துபதியில் பிரசன்னமாயிருந்து, அத்திருசேத்திரத்தின் நூற்றாண்டு விழாவை ஆரம்பித்துவைக்குமாறு மொண்றியல்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் லெஜர் ஆண்டவர்பரிசுத்தபிதாவைஅப்போதுகேட்டுக்கொண்டார். அதேவிதமாக இந்தக் கோடைகாலத்தில் பாப்பரசரைப் பேட்டிகாணவிருக்கின்ற பிரான்சிய ஜனதிபதியாகிய எம். கோத்திஅவர்களும் அவரைக்கேட்பாரென்ற வதந்தியும் அப்போது பரந்துள்ளது. ஜனதிபதியும் சென்ற வியாழக்கிழமை அவரைப் பேட்டிகண்டாரெனத் தந்திச்சமாச்சாரம் தெரிவித்துள்ளது. பரிசுத்தபிதா லூர்துபதிக்குச் செல்வாரானல் நெப்போலியனது கட்டளையின்பேரிலே பரீஸ்நகரைத் தரிசிக்குமாறு பலவந்தஞ்செய்யப்பெற்ற ஏழாம்பத்திநாத பாப்பானவருக்குப்பின் இத்தாலியமண்ணைவிட்டுப் பாப்பரசர்ஒருவர் வெளிநாடு ஒன்றுக்குச் செல்வது இதுவே முதன்முறையாகும், ஒன்பதாம் பத்திநாதபாப்பானவர் இருசிசிலிகளினதும் [illegible]

அடைக்கலம் புகுந்திருந்தாரெனினும் அவர் இத்தாலியமண்ணைவிட்டுவெளிகொள்ளவில்லை. பாப்பரசர்ஏற்கனவேலூர்துபதியைத் தரிசித்திருக்கின்றார். தமக்குமுன்னிருந்த பதினொராம்பத்திநாத பாப்பானவரின் பிரதிநிதியாக இரட்சணிய 19-ம் நூற்றாண்டு ஞாபகார்த்த யூபிலிவருடமுடிவுத் திருச்சடங்குகளுக்குத் தலைமைவகிக்குமாறு 1935-ம்ஆண்டு அவர்அத்திருப்பதிசென்றார். அப்போது 75,000 பேருக்குமேல்சமுகமாயிருந்த யாத்திரிகர்களுக்குப் பிரசங்கித்தார்.

### ருஷியாவில் தங்கியகுருமார்

சோவியற் கூட்டடைமுகாம்களிலே தமதுசிறைவாசகாலம் முடிந்த நான்குபோலிஷ்குருமார் அப்போஸ்தலிக்கதொண்டு ஆற்றுதற்கென்று தாமாகவே அங்கு தங்கியுள்ளார்கள். பதினன்கு வருடம்சிறைவாசஞ்செய்தவரும், தற்போது அறுபதுவயதுடையவருமான லிதுவானியகுருவானவர்ஒருவரும் அங்குதானே தங்கி இவர்களுடன்சேர்ந்து ருஷியாவின்நவீனஅஞ்ஞானிகள், மற்றும் ஸ்ராலினின்குரூரஆட்சிகாலத்தில் தங்கள்சுவநாடுகளிலிருந்து நாடுகடத்தப்பெற்ற கத்தோலிக்கர்மத்தியிலே திருத்தொண்டாற்றிவருவார். இந்தவீரத்துவகுருமாரின் நாமங்களும், அவர்களைப் பற்றிய விபரங்களும் தற்போது அந்தரங்கமாகவே இருந்துவருகின்றன. இச்செய்தியானது சுவநாட்டினின்றும் வெளியேறியுள்ள போலிஷ்மக்களுக்கு யோசெவ் கோலினஅதிமேற்றிராணியார் விடுத்தநிருபம்ஒன்றிலே வெளிவந்துள்ளது.

### கருதினல் மின்ட்சென்ரி ஆண்டவர்

புடாபெஸ்ற்நகரிலே அமெரிக்க தூதுவராலயத்தில் அடைக்கலம் புகுந்து அங்கே சஞ்சரித்துவருகின்ற கருதினல் மின்ட்சென்ரி ஆண்டவருக்கு அனுப்பப்படும் கடிதங்கள் அவருக்குக் கொடுபடுவதுமில்லை, அவருமே கடிதங்கள்அனுப்ப அனுமதிக்கப்படுவதுமில்லை. அங்கே இதுவரை அமெரிக்கதூதுவராயிருந்துவந்த திரு. எட்வாட் வெய்லெஸ் அவர்கள் வாஷிங்ரன்நகரிலே இவ்வாறு பத்திரிகைநிருபர்களுக்குத் தெரிவித்திருக்கின்றார். அவருக்கு அனுப்பிவைக்கப்படும் தபால்கள் அமெரிக்க தூதுவராலய அதிகாரிகளால் வாசிக்கப்பட்டபின், அவர்சேமமாக அதனைவிட்டு வெளிகொள்ளும் நாள்வரை காத்திருக்குமாறு பக்குவமாகச் சேர்த்துவைக்கப்படுகின்றன. சென்ற பங்குனிமாதம் 29-ந்திகதியன்று 65வயதுடையவரான கருதினல்ஆண்டவர் கம்யூனிஸ்தர்களால் சிறைவைக்கப்பட்டிருந்த எட்டுவருடங்களிலும் காசரோகங்கண்டு வருந்தியபோதிலும் தற்போது அந்நோய்க்குரிய அறிகுறி யாதொன்றுமேயில்லாது அவர் "நல்ல பூரணசுக"முள்ளவராயிருப்பதைத் தூதுவராலய டக்றர் பரிசோதனையில் கண் [illegible]ருக்கின்றார்.

### பாத்திமாவில் 40ஆண்டுவிழா

பரிசுத்ததேவதாயார் பாத்திமாபதியிலே மூன்றுபிள்ளைகளுக்கும் முதலாவது காட்சியளித்த நாற்பதாம்ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடுவதற்காக அப்பதியிலே இம்மாதம் 13-ந்திகதி திங்கட்கிழமை உலகின் அநேகபகுதிகளிலிருந்துபோன ஐந்துலட்சம் பேருக்குமேற்பட்ட யாத்திரிகர்கள் சமுகமாயிருந்தார்கள். யாத்திரிகர்களில் அநேகர் முந்தியவாரத்திலேயே அத்திருசேத்திரஞ் சென்றிருந்தார்கள். ருஷியாவினுடையவும், மற்றும் இரும்புத்திரைநாடுகளினதும் பதிலாளிகளாய் வெளிநாடுகளில்வசிக்கின்ற மக்கள் சமுகமாயிருந்தார்கள்.

### அர்ச். இஞ்ஞாசியாரின் சினிமாப்படம்

யேசுசபைஸ்தாபகரான அர்ச். லொயலாஇஞ்ஞாசியாரின் சீவியவரலாற்றை எடுத்துக்காட்டும் ஓர்சினிமாப்படத்தின் முதற்காட்சியானது விரைவிலே றோமாபுரியில் படம்பிடிக்கப்படவிருக்கிறது. அர்ச். இஞ்ஞாசியாரிடமாக ஓர்அமெரிக்கநடிகரான திரு. ஜோஸ் பெறெர்அவர்கள் நடிக்கவிருக்கின்றார். ஓர்அமெரிக்க-ஸ்பானிய தயாரிப்பாகிய இந்தச்சினிமாப்படத்தின் ஒருபகுதி இத்தாலியிலும், மறுபகுதி ஸ்பெயினிலும் படம்பிடித்துத் தயாரிக்கப்படும். திரு. பெறெர் அவர்கள் ஆலோசகராகக் கடமையாற்றும் ஓர்யேசுசபைக்குருவானவருடன் இந்தப்படத்தைத் தயாரிப்பதில் தலைமைவகிப்பார்.

### போலிஷ் கம்யூனிஸ்தஆட்சி

போலாந்தின் திருச்சபை மேலதிகாரியான கருதினல் விசின்ஸ்கி ஆண்டவர் சமீபத்திலே அங்குள்ள ஒெக்லோநகருக்கு விஜயஞ்செய்தபோது, அந்நகர்மேற்றிராசனத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலனரான கொமினெக் மேற்றிராணியார் அவரை வரவேற்றுச் சோபனவாழ்த்துக் கூறியபோது, "போலிஷ் கம்யூனிஸ்தபிரதமர் கோமுல்காலின் ஆட்சியானது 'அதிகம் நேர்மை' யானதெனக்கூறிநின்றார். "கடந்த சில மாதங்களில் ஏதோ புதியதை—அரசாங்கஅதிகாரிகள் அதிகம் நேர்மையாயும், அதிகம்உண்மையாயும் நடவடிக்கைகள் எடுத்துவருவதை எவரும்கவனித்து வந்திருக்கின்றனர். நமது முழுஇருதயத்தோடும் நாம் அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும்; ஏனெனில், இந்தநாட்டிலே—இந்தஎம் தாய்நாட்டிலே கொண்டுள்ள பொதுப்பற்றினல் நாம்ஐக்கியப்பட்டிருக்கிறோம்; தாங்கள் பரிசுத்தபிதாவைச் சந்திப்பதற்காக றோமாபுரி செல்லவிருக்கின்ற இச்சந்தர்ப்பத்திலே, போலிஷ் மேற்குப்பிரதேசங்கள் பரிசுத்தமாதாவாகிய திருச்சபைமட்டில் தங்கள் ஆத்துமங்களிலேயே பக்திபற்றுதல்வைத்துள்ள விசுவாசபிரமாணிக்கமுள்ள மக்களை உறைவிடமாகக் கொண்டுள்ளன"வென்று அவருக்குத் தெரிவியுங்கள் என்றும் அவர் கூறலாயினர்.

> மகிழ்ச்சி பொங்கும் சிரிப்புக்கு ஊற்று மகிழ்ச்சிநிறைந்த இருதயந் தான். கருணை யில்லாவிட்டால் உண்மையான மகிழ்ச்சி இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைகாசிமாதம்

தேவதாயாருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம்.

**பொதுக்கருத்து:** தேவஆராதனைத் திருப்பணிக்கலைகளின் மறுமலர்ச்சி கிறீஸ்துவசீவியத்தைப் புதுப்பிக்கச் செவ்வனே பயன்படத்தக்கதாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** திருச்சபையின்சுதந்திரம் பூரணமாய் ஸ்தாபிக்கப்படத்தக்கதாய் மன்றாடிக்கொள்வது.


சத்தியவேத

# பாதுகாவலன்

1957-ம் ஆண்டு
வைகாசி மாதம் 23-ந் திகதி


## அரசாங்கமும் பாடசாலைகளும்

இந்தியபிரதமர் பண்டிதநேரு அவர்கள் இலங்கையிலே தமது புத்தஜயந்திவிழாச் சுற்றுப்பிரயாணத்தைச் சம்பிரமமாகமுடித்துக்கொண்டு சுவநாடுதிரும்பிவிட்டார். அவர் இந்நாட்டில் தங்கியிருந்த மூத்தினங்களிலும் ஆங்காங்குநிகழ்த்திய சொற்பொழிவுகளிலே தமது அரசியல்ஞானத்தையும், அனுபவஞானத்தையும் கொண்டு எடுத்துக்கூறிய பொன்னுரைகளாலே புத்தசிங்களருக்குப் புத்திபிறந்திருக்குமா? நல்லுணர்ச்சி கிளர்ந்திருக்குமா? தமது விஜயத்தின்பயனாக நன்மைகள்பல ஏற்படுமென்பதே தமது நம்பிக்கையென்று அவரும் இறுதிமொழியாகக் கூறிவிட்டுப் போயிருக்கிறூரே. ஆம், எல்லாம் காலந்தெரிவிக்கும்.

நிற்க, உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்று நடத்தவேண்டுமென்று கத்தோலிக்க, புறொட்டஸ்தாந்தபாடசாலைகளின் பரமவிரோதிகள்போலத் தங்களைக் காட்டாமற் காட்டிக்கொள்ளும் புத்தர்கள்சிலர் வலிந்துகேட்டுக்கொள்ளும் இச்சந்தர்ப்பத்திலே ஓர்நியாயவாதியான திரு. டபிள்யு. கே. விஜெமான்னே என்றபுத்தபிரமுகர் அன்று கழூத்துறையைச்சேர்ந்த மகாவஸ்கந்துவா எனுமிடத்திலுள்ள புத்த ஞாயிறுப்பாடசாலைப் பரிசளிப்புவிழாவில் கூறியிருப்பது ஊன்றியோசிக்கத்தக்கது. அஃதாவது: "சகலபாடசாலைகளையும் அரசாங்கம் ஏற்கவேண்டுமென்று ஆலோசனை கூறுவது ஆபத்தானதும், கொண்டுநடத்தமுடியாததுமாகும். அதற்குப்பதில் ஏற்கனவே தான்எடுத்துக்கொண்ட பாடசாலைகளை அரசாங்கம் திரும்பக்கொடுத்து, அவைகளைநிர்வகித்து நடத்தும்படியாகப் புத்தகுருமாரிடம்ஒப்படைத்துவிடவேண்டும். தற்போது கல்விக்குறைவாலே குற்றங்கள்தானும் அதிகரித்துள்ளன. ஒவ்வோர் கத்தோலிக்க பாடசாலையும் அந்தந்தப்பாடசாலைவளவிலே ஓர்கோவிலைக் கொண்டிருக்கிறது. அதனால் அப்பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகள் சிறந்த சமயவாழ்க்கைக்குரிய ஆதாரத்தைக்கொண்டிருக்கிறூர்கள். ஆகவே, அவர்கள் சிறந்தஒழுக்கபயிற்சிபெற்ற சமுதாயமாக விளங்குகிறூர்கள்" என்பதே.

அன்று மத்துகாமத்திலே லங்காஜாதிக குருசங்கத்தின் பொதுக்காரியதரிசி திரு. ஜே. டி. ஈ. திலகரத்ன பேசியபோது: "உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளில் நிலவிவரும் கல்வியின்தரம் மிகஉயர்ந்ததாகும்; தற்போதைய நிர்வாகத்திலே எவ்விதமேனும் கையிடுவது தாறுமாறுக்கே வழிபண்ணுவதாகும்" எனக் கூறியிருக்கின்றூர். அங்ஙனமாக, உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற யோசனையை இலங்கைக் கம்யூனிஸ்தகட்சியின் நிர்வாகசபை வரவேற்றிருப்பது ஆச்சரியமல்ல. ஆமாம்; கலியாணவீட்டிலேயே கட்டியழுகிறவர் சாவீட்டைக்கண்டால் கைகட்டிக்கொண்டு வாளாவிருப்பரா? "சமயம்என்பது மக்களின் மனதைமயக்கும்அபின்" என்று சொல்லிக்கொள்ளும் கம்யூனிஸ்தர்கள் சமயஸ்தாபனபாடசாலைகள் அழிந்தொழிந்தாலோஎன்று ஆசிப்பார்கள்தானே. இலங்கைச்சர்வகலாசாலை ஆங்கில போதகாசிரியர் திரு. டோறிக் டிசூசா கூறியதுபோல, மக்கள் சாதிய, சமய, சாதிய பிளவுபட்டிருந்தால் இலங்கைப்பிரச்சினைகள் சமாதானமாகத் தீர்த்துக்கொள்ளமுடியாதனவாகும் என்க.

## புத்தகம்மிஷன் அறிக்கை

எத்தகைய பொருமையோ, பிறரைக்கெடுக்கும் உளப்போக்கோ மருந்துக்குத்தானும் கண்டுகொள்ளமுடியாத திரு. மெத்தானந்தாவும், மற்றுஞ்சிலரும் புத்தகம்மிஷன் அறிக்கையை நிறைவேற்றிவைக்கும்படியாய் அரசாங்கத்தை நெருக்கிக் கருமம்பார்க்க வெகுவாக முயற்சிக்கிறூர்கள். பல்வேறு புத்த நிகாயாக்களிடையே ஐக்கியத்தை வளர்த்து, புத்தசமயத்தின் தற்போதைய நிலைமைகளைச் செம்மைப்படுத்துவதற்கான முறைகளைப் புத்தகம்மிஷனர் கண்டறிவார்களென எதிர்பார்க்கப்பட்டது. ஆனல், அவர்களோ தாங்கள் ஈடுபடவேண்டிய கருமத்திற்குப்பதில் கத்தோலிக்கசமயத்துக்கு எதிராகக் குரோதவிதைகளைத்தாங்கள் சென்றவிடமெல்லாம் விதைத்துக்கொண்டு போனூர்கள். புத்தசமயத்தைச் செம்மைப்படுத்துவதல்ல, ஆனல், கத்தோலிக்கசமயத்தை நிர்மூலமாக்குவதே அவர்கள் கொண்டிருந்த ஓர்நோக்கம்என்பது தற்சமையம் நன்குபுலனுகின்றது. ஆங்காங்கு அவர்கள் பலதந்திரோபாயங்களை மேற்கொண்டு மக்களைப் பெருந்திரளாகக் கூட்டி, அக்கூட்டங்களிலெல்லாம் கத்தோலிக்கசமயத்தைஎதிர்த்துஆவேசமூட்டும் பேச்சுகள்நிகழ்த்தினூர்கள். அவர்களின் இந்தச்சுற்றுப்பிரயாணம் முடிந்தபோது, அறிக்கைஎழுதும் கேள்விபிறந்தது. ஒருவரிலே இந்த வேலை ஒப்படைக்கப்பட்டது. அவரும் சம்பளம்பெற்று இந்தஅறிக்கையை எழுதிமுடித்தார். புத்தகம்மிஷன் அறிக்கையின் வரலாறு இதுவேயாகும். இதனைத்தான் மதாவேசம் பூண்ட தனிப்பட்ட சிலர் பெரும்பான்மையினரான புத்தசமயிகளின் கருத்தென்று அரசாங்கத்தைக்கொண்டு அதனை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு தந்திரமாகச் செயலாற்றி வருகின்றனர்என்பது தற்சமையம்வெளிவந்துள்ள உண்மையாகும்.



# நோவனைப் பத்திமுயற்சியின் நோக்கம்

சதாசகாயமாதாவின் நோவனைப் பத்திமுயற்சியானது நாம் தேவதாயாரின் சீவியத்தையும், அவ அனுசரித்த புண்ணியங்களையும் நன்குஅறிவதற்கு ஏதுவாகவிளங்கவேண்டும். சிநேகத்துக்கும், ஆசைக்கும், பற்றுதலுக்கும் இருக்கவேண்டிய அவசியமான ஒரு தன்மை அல்லது குணம், ஒருவரைப் பற்றிய அல்லது ஒருபொருளைப்பற்றிய அறிவுமுதிர்ச்சியென்பது நாம்எல்லோரும் அறிந்ததே. தேவமாதாவைப் பற்றிய அறிவுவளர்ச்சியானது அவமட்டில் நாம்கொண்டுள்ள நேசத்தை அதிகரிப்பிக்க உதவியாகும். சதாசகாயமாதாவின் பத்திமுயற்சியின் அடிப்படையானநோக்கம் அவமட்டில் நமக்குள்ள பக்திவணக்கத்தை விருத்தியாக்குவதாகும்.



இந்தநோவனைப் பத்திமுயற்சியை ஏதும்சலுகையைக்கேட்டு அடைவதற்குமாத்திரம் ஒருவழியென உபயோகப்படுத்துவோமேயானல், அது சுயநலங்கருதும் உதவாக்கிரியையாக மதிக்கப்படத் தக்கதேயன்றி மற்றப்படியல்ல. முதன்முதலாகத் தேவதாயாரைக் கனப்படுத்தவும், பூசித்து நமஸ்கரிக்கவும் உதவியாகும் ஓர்உந்தபத்திமுயற்சியாக நாம்இதைக் கணிக்கவேண்டும். எங்கள் அன்பையும், நேசத்தையும் புதுப்பிக்கும் ஒரு ஞான அப்பியாசமாகக் கருதவேண்டும். இந்தஅன்பும், நேசமும எங்களை யேசுநாதசுவாமியிடங் கொண்டுசெல்வதற்கு உகந்த வழியாகும். எங்கள் நேசத்தையும், அன்பையும் முற்றாய்த்தம்முடையதாக்க—ஒருவகையில் அபகரித்துக்கொள்ள விரும்புவஅல்ல நமதுதேவதாயார். தமது அன்பான திருக்குமாரனை நாம் அடையப்பண்ணுவதற்கு ஒருமூலதனமபோலப் பாவிப்பதற்கே தம்மை நேசித்துப் பூசித்து வணங்கவேண்டுமென அவவிரும்புகிறூ. தம்மூலம் யேசுவிடம்போவதே உகந்தவழிஎன்பது நம்மிலும்பார்க்க அவவுக்கு நன்ருய்த்தெரியும். தேவதாயை நேசியாமல் தேவகுமாரனைநேசிப்பது முற்றிலும் முடியாதகாரியம் தேவசுதனே தமதுதாயாரை நமக்குத்தந்து நாம் அவவைச்சங்கிக்கவேண்டுமென விதித்திருக்கிறூர். யேசுவின் தாய் மனுக்குலத்தின்தாய். எனவே, அவவைப் பத்திசெய்வதும், வணங்குவதும் நமது கடமை.

விசுவாசிகளும், விசுவாசிகள்அல்லாதோரும இந்தப்பத்திமுயற்சியை வாரந்தோறும் தவறாதுஅனுசரித்துவர அவர்களை அருட்டித் தூண்டிவிடுகிற முகாந்திரம்என்ன? இதில்பங்குபற்றுவதற்காக எத்தனையோபேர் பலவித தியாகங்கள்செய்ய நேரிடக்கூடும். அவற்றின்பேறுகளை நாம் சிறுகடுகளவேனும் இழந்துவிடாதபடி எங்கள் நோக்கம், கருத்து தவறில்லாதனவாய் இருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டியது நமதுகடன். நாம் என்னகருத்துடன் இந்தஆராதனைகளில் பங்குபற்றுகிறூமென ஒவ்வொருவரும் தன்னைத்தானே ஆராய்வாக வினவவேண்டும்.

**முதலாவதாக:** தேவதாயாரின் சேவையிலும், நேசத்திலும், ஞானத்திலும நாம்வளர்ச்சியடைய வேண்டும் என்றசுத்தகருத்து இருக்கவேண்டும். கிறீஸ்துநாதர் அவவைஎவ்விதம்நேசித்துச் சங்கித்தாரோ அதுபோலநாமும் அவவைநேசித்துச்சங்கிக்க உண்மையாகப் பிரயாசப்படவேண்டும். மரியாயின்மட்டில் நமக்குள்ளநேசம் கிறிஸ்துநேசமாக இருக்கவேண்டும்.

**இரண்டாவதாக:** யேசுவிடம் போகும்பாதை மரியாயே. ஆகையால், யேசுவிடம் நம்மைச்செல்லவிடாது தடையாயிருக்கும் எந்தக்கிரிகையையும் சதாசகாயமாதாவின் உதவியோடு எம்மாலான பிரயாசைஎடுத்து விலக்கவேண்டும்.

**மூன்றுவதாக:** யேசுவிடம்போவதென்றல் எல்லாத்தையும்விட அவரை நேசிக்கப் பிரயாசப்படுதல் என்பதுதான் கருத்து. "என்னில் வாசம்பண்ணுங்கள்" என்கிறூர் யேசுநாதர். நேசத்தினுல்அன்றி அவரில்வாசம்பண்ணுவதுஎப்படி? யேசுநாதரைநேசிப்பதென்றல் என்ன? அவருடைய திருச்சித்தத்துக்கமைய நச்சீவியத்தை நடத்துவதன்றி மற்றப்படியல்ல.

இந்த நல்லநோக்கங்களுடன் சதாசகாயமாதாவின்நோவனை, ஆராதனைகளிற் பங்குபற்றுகிறேனே? இந்தப் பத்திமுயற்சி திவ்வியயேசுவிற்குச்சமீபமாக என்னைக்கொண்டுவந்திருக்கிறதா? அவரின்நேசம் என்னில் அதிகரித்திருக்கிறதா? அவரின்சித்தத்துக்கு அமைந்து நடக்கிறேனு? என்சீவியம் முன்னையிலும்பார்க்கத் திருத்தமடைந்திருக்கிறதா? ஓரேவார்த்தையிற் சொல்லப்போனல் உத்தமகத்தோலிக்கனுக ஒழுகுகிறேனு? இக்கேள்விகளை நம் மனக்கண்முன்வைத்து, நன்மையடையத்தக்கவகையில் நடந்துகொள்வோமானல் சதாசகாயமாதாவின் ஒத்தாசைநமக்குத் தப்பாதுகிடைக்கும்.

---

● இந்தியஜனதிபதியாக டக்றர் இராஜேந்திர பிரசாத்அவர்கள் மீண்டும் தெரிவுசெய்யப் பெற்றிருக்கின்றூர். இவருக்குமொத்தமாக 4,49,698 வாக்குகள் கிடைத்தன. இவரைஎதிர்த்துப் போட்டியிட்ட திரு. நாகேந்தர நாராயணதாஸுக்கு 2,000வாக்குகளும்; திரு. கௌதிரு ஹரிராமுக்கு 1,496வாக்குகளும் கிடைத்தன

● ஆயுதங்களைக் குறைப்பதுபற்றிச் சோவியற்ருஷியா அத்துணைகருத்தாகப்பேசிவருவதைப்பார்த்தால் அதுதன்னுடைய பிரமாண்டமான இராணுவ நிர்வாகத்தைக் கொண்டுசெலுத்த முடியாதநிலையில் இருப்பதையே காட்டுகிறதென்று அமெரிக்கஜனதிபதி ஐஸன்ஹாவர் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல தேசங்களில்

## தக்காளி மருந்துகள்

அமெரிக்க விவசாயப்பகுதி விஞ்ஞானிகள்செய்த ஆராய்ச்சியின்பயனாகத் தக்காளி ஒருமருந்துச்செடியாகவிளங்குகிறது. கிருமிகொல்லி மருந்துசெய்வதற்குத் தக்காளிச்செடி உதவுகின்றது. மனிதரையும், மிருகங்களையும், பயிர்பச்சைகளையும் பாதிக்கும் சில நோய்களைப்போக்கும் கிருமிகொல்லி மருந்தைத் தக்காளியினின்றும் தயாரிக்கலாம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். தக்காளியின் இலை, தண்டு முதலியவற்றிலிருந்து "பூசேரியம்" என்னும் பூசணம்—அதாவது, பூஞ்சை பிடிக்காதுதடுக்கும் கிருமிகொல்லிச் சத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தப்பூசணந்தான் தக்காளிமுதலிய பயிர்வகைகளை அழித்துச் சேதம்விளைவிப்பது. இதனை ஒழிக்கும் மருந்துச் சத்துக்கு "டொமாட்டீன்" என்று பெயர். இந்தடொமாட்டீன்சத்தைக் கொண்ட களிம்பினால் சருமவியாதிகளை நீக்கிக்கொள்ளலாம். அமெரிக்க விஞ்ஞானிகள் "டொமாட்டீன்" சத்தைக்கொண்டு புதியதொரு இரசாயனப்பொருளையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதற்கு "டொமாட்டீடைன்" என்று பெயர்கொடுத்திருக்கின்றனர். இதிலிருந்து "கார்ட்டிசோன்" என்ற மருந்து செய்கிறார்கள். இதனால் கீல்வாதம், இரத்தவாதம் முதலியநோய்களைக் குணப்படுத்தலாம்என்று ஆராய்ச்சிமூலம் முடிவுசெய்திருக்கிறார்கள். தக்காளிலிருந்து நோய்நீக்கும் பலமருந்துகளுக்குவேண்டிய இருபது இரசாயனப்பொருள்களைத் தயார் செய்திருக்கிறார்கள்.

## மனிதசெயற்கை இரத்தம்

மனிதசரீரத்தில் ஓடும் இரத்தம் ஏதாவதுகாரணத்தால் குறைந்தால் உயிருக்குத் தீங்குஏற்படலாம். பலத்த காயங்கள் ஏற்பட்டால் சரீரத்திலிருந்து இரத்தம் அதிகமாகவெளியாகிறது. இம்மாதிரியானநிலையிலே மனிதனின்உயிரைக் காப்பாற்றுவதற்கு இரத்தசிகிச்சைதான் சரியானவழியாகும். சரீரத்தில் இரத்தம் குறைந்து போய்விட்டால் இரத்தத்தைச் சரீரத்தில் செலுத்தினால்தான் உயிர்தப்பமுடியும். இம்மாதிரி நோயாளிகளின் சரீரத்திலே செலுத்துவதற்காக இரத்தத்தை ஆரோக்கியமுள்ள மனிதர்களிடமிருந்து தானமாகவாங்குகிறார்கள். ஒருமனிதனுக்கு இன்னொருமனிதனின் இரத்தம்சிலவேளை பொருந்தாது.

இரத்தத்தில் நான்குரகங்கள் உண்டென்று ஆராய்ச்சிமூலம் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒவ்வோர்மனிதனின் இரத்தமும் எந்தரகத்தைச் சேர்ந்ததென்று தெரிந்துகொண்டு அந்தரக இரத்தத்தைச் செலுத்தினால்தான் நோயாளிகுணமடைவான். யுத்தகளத்திலே ஆயிரக்கணக்கான படைவீரர்கள் ஒரேசமயத்தில் படுகாயமடைந்தால் இரத்தசிகிச்சையால்தான் உயிர்பெறமுடியும் என்றநிலையிலே இருப்பார்கள். காயமுற்ற ஒவ்வொருவருடைய இரத்தத்தையும் பரிசோதித்து அதன் ரகம் என்னவென்று தெரிந்துகொண்டு அவர்களுக்கு அந்தரகஇரத்தத்தைச் செலுத்துவது யுத்தகாலத்தில் முடியாதகாரியம். இந்தச்சிக்கலைத் தீர்ப்பதற்கு இன்னொருவழி கண்டுபிடித்துள்ளனர். இது என்னவென்றால், இரத்தத்திலுள்ள சாரத்தைச் செயற்கைஇரத்தமாகத் தயாரித்து வைத்திருப்பதுதான். இதன்பெயர்தான் இரத்தப்பொடி அல்லது "பிளாஸ்மா!"

ஆரோக்கியமான மனிதஉடம்பில் ஐந்து "லிற்றர்" இரத்தம் இருப்பதாகவும், இரண்டுலிற்றர்இரத்தம் சேதமடைந்துவிட்டால் இரத்தசிகிச்சைஅவசியமென்றும் வியன்னா டக்றர் பெல்ஸ் அவர்கள்ஆராய்ச்சிசெய்து வெளியிட்டிருக்கிறார். தீப்புண், காயம்இவற்றால் இரத்தசேதம் அதிகமாயிராது. என்றாலும், அதிர்ச்சியாலும், இரத்தஓட்டம் தடைப்படுவதாலும் மரணம்சம்பவிக்கக்கூடும். இந்தமாதிரிச் சம்பவங்களில் இரத்தஓட்டத்தை அதிகரிக்கச் செய்வதுதான் அவசியம். அசல் இரத்தம் உடம்பிலே சேரவேண்டும் என்பதில்லை. சிவப்பணுக்களின் குறைவால்அல்லாமல் ஓட்டக்குறைவால் நேர்ந்தவிபரீதமாகையால் பிளாஸ்மா சிகிச்சையே போதுமானது.

பிளாஸ்மாவை விசேஷமுறையில் உலர்த்தி மஞ்சள்நிறமுள்ள பொடியாக நீண்டகாலம் பாதுகாத்துவைக்க முடியும். தேவையானபொழுது அதை நீர்க்கலவைசெய்து உபயோகித்துக் கொள்ளலாம். பிளாஸ்மாவிற்கு இப்பொழுது மாற்றுப்பொருள்களும் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவற்றில் சர்க்கரையிலிருந்து தயாராகும் "டெக்ஸ்ட்ராவன்" என்றபெயருடன் செயற்கைஇரத்தப்பொடி பிரித்தானியாலே தயாராகியுள்ளது. அல்லலுற்ற மக்களை இந்தவிசேஷபொடி காப்பாற்றியிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

* * *

● பவேரியா நாட்டைச்சேர்ந்த கொன்னேர்ஸ் றூத் எனுமிடத்திலே சிலுவையில்அறையுண்ட திவ்வியநாதரின் திருக்காயங்கள் தன்னில் அற்புதமாகப் பதியப்பெற்றுள்ள 59 வயதுடைய தெரேசாநியூமன்என்ற ஜேர்மன்மாதைச் சென்றபெரியவெள்ளிக்கிழமையன்று சுமார் 4,000 தரிசகர்கள் பார்த்துச்சென்றார்கள். அப்போது அவள் தனதுபடுக்கையில் நிமிர்ந்தவண்ணம் பா[illegible]லையில் அமர்ந்திருந்தாள்.

● பிரித்தானிய தொழிற்கட்சியின் தலைவரான திரு. ஹியு கெயிற்ஸ்கெல் அவர்களுக்குச் சமீபத்திலே பரிசுத்த பாப்பரசர் தமது நூல்நிலையத்தில் பேட்டியளித்து அவருடன் 15 நிமிஷம்வரையிலே சம்பாஷிக்கலாயினர். இத்தாலிய சோஷலிஸ்தர்களை ஒருமுகப்படுத்தும் திட்டத்தைப்பற்றிய விபரங்களை அறிந்துகொள்ளுமாறே திரு. கெயிற்ஸ்கெல் அங்குசென்றிருந்தார்.

● றோ[illegible]மாநகரிலிருந்து சிலமைல் தூரத்திலுள்ள தனதுநவமான பொன்ரே கலேறியாஎனப்படும் புதியநிலையத்திலிருந்து வத்திக்கான் வானொலிநிலையம் செய்திகளை ஒலிபரப்பத்தொடங்கியிருக்கிறது. இந்தப்புதிய நிலையத்தின் ஒலிபரப்பிகளை அமைக்கும்வேலை பூர்த்தியடையும்போது உலகின் எந்த ஒருபகுதியிலுமிருந்தும் செய்திகளைக் கேட்கக்கூடியவகையிலே அவைகள் அத்துணை சக்திவாய்ந்தனவாய் இருக்கும்.

● குள்ளர்களுக்கு ஓர்வித ஊசிமருந்துஏற்றி அவர்களை நெட்டையர்களாக்கும் நவீனமுறைஒன்றை அமெரிக்கவிஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனராம். தலையிலே புறக்கழுத்துக்குச்சமீபத்திலுள்ள "பிச்சூட்டறி" என்ற கோளந்தான் வளர்ச்சிக்குரிய சத்தைக் கொடுக்கின்றதாம். இந்தச் சத்தைக் குட்டையர்களுக்கு ஊசிமருந்தாக ஏற்றிவிட்டால் அவர்களெல்லாம் நெட்டையர்களாகி விடுவார்களாம்.

● ஒருவரின் இரத்தத்தைப் பரிசோதித்துவிட்டு, அவர் இறக்குங் காலத்தை அதிகம்சரியாகத் தெரிவிக்கக்கூடிய நூதனகருவிஒன்றைப் பரீஸ் நகரிலே எம். லிகாம்தி என்பவர் கண்டுபிடித்திருக்கிறாராம். ஆயிரம்பேரின் இரத்தத்தைப் பரிசோதித்துப்பார்த்து அறிந்தமுடிவின்படி மூன்றுவருடத்திலே அவர்களில் 187 பேரின் மரணகாலம் சரியாயிருந்ததாம்.

* * *

● மலாயாவிலே சென்ற 18-ந் திகதிவரையில் 57,000 பேருக்கு இன்புளுவென்சா எனப்படும் குளிர்சுரம் கண்டுள்ளது. இத்தொகை முதல் நாளிலும் 22,000 பேரால் அதிகரித்துள்ளது. சுகாதார அதிகாரிகளும், கல்வி அதிகாரிகளும் கலந்தாலோசித்தபோதிலும் பாடசாலைகளை மூடுவது பற்றி எவ்விதமான முடிவும் இன்னுமே செய்யப்படவில்லை.

* * *

● சீனக் கம்யூனிஸ்தர்களாலே சிறைவைக்கப்பட்டு ஏறக்குறைய நான்குவருடகாலம் சிறைவாசஞ்செய்திருந்த ஓர்சீன யேசுசபைக் குருவான வண. பிரான்சீஸ்சேவியர் வாங் சுவாமியார் சமீபத்திலே சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டுச் சிலவாரங்களின் பின் மரணமாயினர். சுவாமியாரின் சீவாபாயமான நிலைமையைக் கண்டதும் தங்கள்மீது பழிஏற்படாமலே அவர்கள் அவரை விடுதலைசெய்தார்கள்.

---

## மட்டக்களப்பு
# தாண்டவன்வெளித் தபால்

**மரண ஞாபகார்த்த தினம்:** சென்ற 20–5–57 திங்கள்வாரம் தாண்டவன்வெளி, பரிசுத்த வியாகுலமாதா ஆலயத்தில் திருமதி செசீலியா நல்லம்மா சாமுவேல் என்பவருடைய ஆன்மஇளைப்பாற்றிக்காகப் (2-ம்வருட ஞாபகம்) பங்குக்குருவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமியவர்களால் திருக்கப்பாடற்பூசையும், ஏனையதிருச்சடங்குகளும் நிறைவேறின. பூசையின் முன் அவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடிக்கொள்ளும்படியாகக் கேட்டு ஞாபகதினத் துண்டுப்பிரசுரங்கள் விசுவாசிகளுக்குவழங்கப்பட்டன.

**பாடசாலைகளின் ஆரம்பம்:** அன்று இப்பங்கிலுள்ள ஆண், பெண் பாடசாலைகளின் ஆரம்பதினம். காலை 8-30 மணியளவில் இருபாடசாலைகளையுஞ்சேர்ந்தமாணவர், மாணவிகள், ஆசிரியர்கள் ஆலயத்தில்ஒருங்கு கூடினர். பங்குச்சுவாமியவர்கள் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளினர். ஆசீர்வாதநேரத்தில் "வேனிக்கிறேயாத்தோர்" என்ற தூயஆவியின்பாடல் பாடப்பட்டது. ஆசீர்வாதம் முடிந்ததும் சுவாமியவர்களால் சிலநன்மதிகள் கூறப்பட்டன. பின்னர் இப்பங்குப் பெண்கள்பாடசாலையில் தொண்டாற்றும் திருமதி தெரேசா பிரான்சீஸ் அவர்களது பிரியஅன்னையாரான திருமதி செசீலியா நல்லம்மா சாமுவேல் என்பவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காகப் பங்குக்குருவர் தலைமையில் இருபாடசாலையினாலும் விசேஷவேண்டுதல்கள் செய்யப்பட்டன.

— நிருபர்

---

யோசெவ் போல்அவர்களின்
7-ம் வருட
## மரண ஞாபகம்
**இறப்பு: 25-5-1950**

இவருடைய ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு இரந்துநிற்கும்,

மனைவி — மக்கள்

---

## மன்னரும் ஏழுமந்திரிமாரும்

ஓர்நல்லெண்ணத் தூதின்பேரிலே மந்திரிமார் எழுவர் மன்னாருக்குச் சென்று அங்கே இருதினங்கள் — அதாவது ஆனிமாதம் 1-ந்திகதியும் 2-ந்திகதியும் அங்கே தங்கியிருக்கப் போகின்றார்கள். நிதிமந்திரி, போக்குவரத்துமந்திரி, காணி—காணிஅபிவிருத்திமந்திரி, வர்த்தகமந்திரி, தபால்—வானொலிமந்திரி, உள்நாட்டுமந்திரி, சுகாதாரமந்திரிஎன்பவர்களே ஏழுமந்திரிமாருமாவர். இவர்கள் மன்னார்ப்பிரிவைப் பரக்கச்சுற்றிப் பார்த்து அதன்தேவைகளைக் கவனித்துப்போவார்களாம். தங்கள்நிலைமைகளை அபிவிருத்திசெய்யுமாறுமன்னாரிலுள்ள சிலகுறிப்பிட்டமக்கள் கேட்டுக்கொண்டதன்பேரில்தான் இவர்களெல்லாந்திரண்டு அங்குசெல்லுகின்றார்களாம். இவர்கள் இச்சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி, மன்னார்த்தொகுதியில் பிரசாரக்கூட்டங்களும் நடத்துவார்களெனத் தெரியவருகிறது.

---

# வெந்நீர்—தண்ணீர் ஸ்நானம்

நாடோறும் வெந்நீரில்குளிப்பது நல்லதா, அல்லது குளிர்ந்தநீரில் குளிப்பது நல்லதா? என்றகேள்விக்கு வைத்தியநிபுணர்களாலும் ஒருதிட்டமானபதில் அளிக்கமுடியாதிருக்கிறது. வெந்நீரில் குளிர்ப்பவர்களும் உண்டு. வெறும்தண்ணீரில் குளிப்பவர்களும் உண்டு. இது அவரவர்களின் சொந்தப் பழக்கவழக்கங்களாலும், விருப்பு வெறுப்புகளாலும் நிர்ணயிக்கப்படுவதொன்றாகும். தினந்தோறும் வெந்நீரில்குளித்துப் பழகியவர்களுக்குக் குளிர்ந்தநீரைக் கண்டாலே ஒருவித நடுக்கம் ஏற்பட்டுவிடுகிறது. அதேபோல் குளிர்ந்தநீரில் குளித்துப்பழகியவர்களுக்கு வெந்நீர்என்றால் தீராத வெறுப்பு உண்டாகிறது. இதுசம்பந்தமாக மற்றொருபிரச்சினைபற்றியும் வைத்தியசாத்திரிகளிடையே எவ்வளவோகாலமாகப் பலத்தவாதம் நடைபெற்றுவருகிறது. அதாவது, தினமும் எப்போது குளிக்கவேண்டுமென்பதே. சூரியன் உதயமாகுமுன் துயிலெழுந்து குளிர்ந்தநீரில் குளிப்பது உடலுக்கு ஆரோக்கியத்தையும், வனப்பையும் சுறுசுறுப்பையும் அளிக்குமென்று சிலர்கூறுகிறார்கள். ஆனால், வெயில் வந்தபின் குளிப்பதே உத்தமமென்று வேறுசிலர்கூறுகிறார்கள். எப்படியிருப்பினும் எல்லோரும் அதிகாலையில் அருணோதயத்துக்குமுன்னரே படுக்கைவிட்டெழுந்து குளிப்பதென்பது சாத்தியமல்ல. அநேகர்தங்கள்வேலைகளைமுடித்துச் சாயங்காலம் இல்லத்துக்குத் திரும்பியபின்னரே நீராடுகிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் பொதுவாகக்குளிப்பதற்கு வெந்நீரையே உபயோகிக்கிறார்கள். வெந்நீரில் குளித்தால், பகல்முழுவதும் தாங்கள் வேலைசெய்தபோது உடம்பில்சேர்ந்த அழுக்கும், அசுத்தமும் அகல்வதுடன் உடற்சோர்வும் நீங்குவதாக இவர்கள் கூறுகிறார்கள்.

எனவே, மக்கள் தினமும் காலையிலோ, அல்லதுமாலையிலோ குளிக்கலாம். பொதுவாகக் காலையில்குளிப்பவர்கள் குளிர்ந்தநீரையும், மாலையில் குளிப்பவர்கள் வெந்நீரையும், உபயோகித்தல்நலம். நோவாய்ப்பட்டிருந்தாலொழிய மற்றப்படி ஒவ்வொருவரும் தினந்தோறும் குளிப்பது அவசியமாகும். தினமும் குளிக்காதிருந்தால், உடம்பில் அழுக்குச்சேர்ந்து, சருமரோகத்தை உண்டாக்கும். கிருமிகள் பெருகத் தொடங்கிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்

### கட்டடவசதியற்ற பாடசாலைகள்

"இலங்கையிலுள்ள இரண்டாயிரத்துக்குமேற்பட்ட பாடசாலைகளுக்கு நல்லகட்டடங்கள் கிடையா. மிகவும் அத்தியாவசியகமாகத் தேவைப்படும் தளபாடங்கள்முதலாய்ச் சிலவற்றிற்குக் கிடையா. சில பாடசாலைகளில் மரங்களுக்குக்கீழ் வகுப்புகள் நடைபெறுகின்றன. இந்தப் பாடசாலைகளுக்கு நிதிவழங்க என்னிடமபோதிய பணமில்லை. இதற்கிடையில் உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளையும் பொறுப்பேற்று நடத்துமாறு என்னைக் கேட்கிறார்கள்."

திரு. டபிள்யு. தஹநாயகா,
கல்விமந்திரி.

### மொழிப்பிரச்சினை சில்லறைவிஷயமாம்

"சகோதர மனப்பான்மையுடனும், நல்லெண்ணத்துடனும் வாழ்ந்த் தமிழ், சிங்களமக்களிடையே பிளவை ஏற்படுத்தி நாட்டையே சின்னாபின்னமாக்கச் சிலசுயவர்கள் சதிசெய்கின்றார்கள். நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி, அமைதியைக் குலைத்து, மக்களின் நல்வாழ்வையே சிதைவுறச்செய்யும் சுயநல சூழ்ச்சிக்காரரை நாம் சும்மா விடப்போவதில்லை. மொழிப்பிரச்சினை உண்டு. நாம் அதை மறுக்கவில்லை. ஆனால், பிரச்சினையைத்தீர்க்க வழி இதுதானா? சமாதானமுறையில் பேசித் தீர்த்துக்கொள்ளும் சில்லறைவிஷயத்துக்கு எதற்காகக் கூச்சலும், கும்மாளமும்?"

திரு. பிலிப் குணவர்த்தன,
உணவுமந்திரி.

### நியாயமான அளவு தமிழ் உபயோகம்

"சுயபாஷைகளில் தந்தியனுப்பத் தபாற்பகுதி வசதியளித்துள்ளதல்லவா? ஆனால், நடைமுறையில் சிங்களத்திலேயே தந்தியனுப்பத் தமிழ்ப் பகுதிகளிலும் வசதியளிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. தமிழர் அதிகமாகவசிக்கும் இடங்களிலே தமிழில் தந்தியனுப்பும்வசதி இல்லாதிருக்கிறது. வெள்ளவத்தை, உடப்பு, மூந்தல், ஒட்டமாவடி, அக்குறணை, மடுரோட்டுப்போன்ற 90 வீதத்துக்கு மேற்பட்ட தமிழர்வாழும் இடங்களில் சிங்களத்தில் தந்தியனுப்பும் வசதிகளே இருக்கின்றன. இந்த இடங்களிலே தமிழில் தந்தியனுப்ப வசதியின்றேல் 'நியாயமான அளவு தமிழ் உபயோகம்' என்பதன் அர்த்தமென்ன?"

"உதயதாரகை"

### தமிழாசிரியரும் சிங்களமும்

"நாம் அணுக்குண்டுக்காலத்தில் வாழ்கிறோம். இந்தக்காலத்துக்கேற்ப நமது கல்விக்கொள்கைகளையும் மாற்றியமைக்கவேண்டும். கல்விமந்திரியைப் பேட்டிகண்டவிடத்திலே, தமிழ்ஆசிரியர்களெல்லாம் சமஷ்டிவாதிகளாக இருக்கிறார்கள்; ஆசிரியர்கள் சமஷ்டிக்கொள்கையை உதறிவிட்டுச் சிங்களங்கற்க முன்வந்தால் தமிழர்களை முதலிடத்தில் வைப்போம்என்றார்."

திரு. எஸ். ஆர். தம்பிமுத்து,
பட்டிருப்பு.

### அரசாங்கமே காரணம்

"அரசாங்கம் தனது நிர்வாகஅறிக்கைகள்மூலமும், பொலிசரின் அலுவல்களில் தலையிடுவதன்மூலமும் மக்கள் நாட்டின்சட்டத்தையே அலட்சியஞ் செய்யும்நிலைமை உண்டாக்கியுள்ளது. இதன்காரணமாகவே நாட்டில் குற்றங்கள் பெருகுகின்றன. எனவே, அரசாங்கம் கண்டிக்கப்படல் வேண்டும். இந்த அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தைமட்டுமல்ல, சாதாரணமனிதனின் பாதுகாப்பையுமே சீர்குலைத்துவிட்டது."

திரு. டட்லி சேனநாயகா,
முன்னைநாள் பிரதமர்.

### ஓர்சிறிய விஷயம்

"பிரதமரின்யோசனை நாம் வீட்டுக்குள்ளே தமிழ்பேசும் உரிமைகொடுக்க உத்தேசித்திருப்பதுதான். அவரது நியாயமான அளவு தமிழ் உபயோகத் திட்டம் இதுதான். நாம்இன்று எதைத்தொடக்கினும் பிரதமர்அதைத் தடைசெய்வதாகவே முதலில் கூறுவார். பின்னர்அவர் 'நாங்கள் நடத்தித்தான் முடிப்போம்'என்றால் பேசாமல் விட்டுவிடுவார். இதைக் கடந்த திருமலைமகாநாடும், ஸ்ரீ எதிர்ப்பும் எமக்குக் காட்டுகின்றன. தற்போது ஆவணிப்போராட்டத்தை ஓர்சிறிய விஷயமெனப் பிரதமர் எண்ணுகிறார் போல் தெரிகிறது. எதுநேர்ந்தபோதிலும் சோலபரி ஒற்றைஆட்சித்திட்டத்தை ஒழித்துக்கட்டும்வரை எமது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியேதீருவோம்."

திரு. சி. வன்னியசிங்கம்,
தமிழரசுக்கட்சித்தலைவர்.

### உரிமைகளை மறுப்பதும் தீங்கு

"புத்தர்பிரானது போதனைகளின் அடிப்படை அம்சமாகக் கருதப்படுவது தீங்கிழையாமைத் தத்துவமே. தீங்கிழையாமையென்றால் தான் உட்பட எவருக்கும் தீங்கிழைக்கக்கூடாதென்பதாகும். தீங்கு என்பது சரீரசம்பந்தமானவை மட்டும் குறிப்பதல்ல. உரிமைகளைமறுப்பதும் அதன் கீழ் வரும்."

டக்ரர் மலலசேகரா,
சோவியற் ருஷியாவுக்கு
இலங்கையின் புதிய ஸ்தானிகர்.

### நமக்குப் பிரதானமானது

"ஆளுங்கட்சியினரோ, அல்லது நம்மை நசுக்கவேண்டுமென்ற மனப்பான்மை கொண்டவர்களோ எதை வேண்டுமானாலும் செய்யட்டும். அதை நாம் தைரியத்துடனும், ஒற்றுமையுடனும் எதிர்த்துப் போராடவேண்டும். நமக்குப் பிரதானமானது நம்முடைய கோரிக்கைகள் — அடிப்படைஉரிமைகளை அடைதலாகும். ஆகவே, மிகப் பொறுப்பானமுறையில் நாம் நடக்கவேண்டும். பொறுப்புடனும், காந்தியார்காட்டிய அகிம்சைவழியிலும் நாம் செல்லுவோமானால் கட்டாயம் வெற்றியும், அதன்சிறப்பும் நமக்கே. தமிழன் அஞ்சாநெஞ்சம் படைத்தவனென்று வரலாறுகள் கூறுகின்றன. ஆகவே, அதன்பிரகாரம் நாம் சரிபிழை, நீதிஅநீதி இவைகளை உணர்ந்து கடமையாற்றுதல் பிரதானம்."

திரு. எஸ். தொண்டமான்,
இந்திய ஜனநாயக காங்கிரஸ் தலைவர்.

### பலநன்மைகள் ஏற்படுமா?

"மூன்றுநாட்கள்தான் நான் இங்கு தங்கியிருந்தேன். எனினும், நான் கண்டவை எண்ணற்றவை. இந்தஅனுபவத்தை என்றும் மறக்கமுடியாது. என்விஜயத்தின்பயனாகப் பல நன்மைகள் ஏற்படுமென்பதே என்நம்பிக்கை."

இந்தியபிரதமர் நேருஅவர்கள்

### பதினாறில் மூன்று

"தற்போது சிங்களவர்நடத்தும் நாடுபிடி படலத்தால் முக்கியமாகப் பாதிக்கப்படுபவர்கள் முஸ்லீம்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. கல்லோயாத்திட்டம், அல்லை-கந்தளாய்த் திட்டம் ஆகிய இடங்களில் குடியேற்றப்படும் சிங்களச்சகோதரர்கள் அடுத்த சில ஆண்டுகளில் ஒருமுஸ்லீம் பிரமுகரைத் தங்கள்பிரதிநிதியாக அனுப்பமாட்டார்கள். 16 தொகுதிகளில் மூன்றுதொகுதிகள் பறிபோகப் போகின்றன. நாம்இனிச்சுயமரியாதையுடன் வாழவேண்டுமானால் ஆவணிப் போராட்டத்தில் நீங்கள் அனைவரும் பங்குபற்றவேண்டும்."

திரு. ந. இ. இராசவரோதயம்,
திரிகோணமலை, எம். பி.

# கல்விக்கொள்கைபற்றிய கண்டனம்

"இந்நாட்டில்புத்தர்கள் பெரும்பான்மையினராய் இருந்தாலும், இலங்கையின் சனத்தொகையிலே பத்துச் சதவீதமுள்ள கத்தோலிக்கரும் புத்தர்களைப்போலவே அரசாங்கத்திற்கு வரி செலுத்துகின்றனர். ஆகையால், அரசாங்கம் சமயசார்பற்றதாய் இருப்பதைவிட்டுப் பெரும்பான்மையினரின் நலத்திலேயே கண்ணுங்கருத்துமாக இருப்பதும் எல்லாச்சமயத்தவர்களாலும் கொடுக்கப்படும் பொதுவான வரியை ஒருசமயத்திற்குமட்டும் செலவு செய்வதுயாதுதல்லதல்ல. இத்தகையமுறையை உலகிலெங்குமாடும் கடைப்பிடிப்பதில்லை. ஆகையால், இலங்கை அரசாங்கத்தின் போக்கே ஒருவிசித்திரமாக இருக்கிறது" என்று நவலெலி, சென்சேவியர் கல்லூரிமண்டபத்தில் திரு. ஏ. எம். எவ். ஜே. கோஸ்ரா அவர்கள் தலைமையில்நடைபெற்ற கத்தோலிக்க மக்களின் கூட்டமொன்றிலே முன்னைநாள் கோட்டே, சென்தோமஸ்கல்லூரி அதிபர் வண. ஜே. ஜி. பி. ஜயசூரியா சுவாமியவர்கள் பேசுகையில் கூறலாயினர்.

### சிறுபான்மையினர்

அவர் மேலும்தொடர்ந்து கூறியதாவது: "இலங்கையில் ஜனநாயக ஆட்சி என்றபெயரில் சிறுபான்மையினர் நசுக்கப்படுகின்றனர். அத்துடன் பொதுமக்களின்பணம் ஒருகுறிப்பிட்ட பெரும்பான்மையான சமயசடங்குகளுக்குச் செலவிடப்படுகின்றது. இந்நாட்டில் இந்துக்கள், புத்தர்கள், கத்தோலிக்கர், கிறிஸ்துவர்கள், முஸ்லீம்கள் ஆகியோர் அனைவருமே அரசாங்கத்திற்கு வரிசெலுத்துகின்றனர். ஏன் ஒருசமயத்திற்குமட்டும் இவர்களுடையவரிப்பணம் செலவிடப்படவேண்டும்? இதுவா ஜனநாயகம்? பெரும்பான்மையினரின் ஆட்சியென்றாலும், சிறுபான்மையினரை இவ்வளவுகேவலமாக நடத்தக்கூடாது.

### மோசமடைந்துவரும் கல்வித்திட்டம்

"இலங்கையின் கல்வித்திட்டம் வரவர மோசமானநிலையை அடைந்துவருவது யாமெல்லாம் அறிந்ததே. இந்த நிலையில் இனிமேல் எந்தச்சமயத்தினரும் புதிதாகப் பாடசாலைகளைத் திறக்கக்கூடாதென்றும், அப்படித் திறந்தாலும் அரசாங்கம் உதவிபுரியாதென்றும் அண்மையிலே கூறப்பட்டுள்ளது.

"நாம் பாடசாலைகளைத்திறப்பது இந்நாட்டின் மக்களுக்காகவேயன்றித் தனிப்பட்டவர்களின் நன்மையைக் கருதியல்ல. கத்தோலிக்கபாடசாலைகளிலேயே அவர்களின் கலாசாரம் கெட்டுவிட்டதாகச் சிலர் கூறுகின்றனர். இன்று இலங்கையில் தலைவர்களாக இருப்பவர்களும், இவ்வளவு பேசக் கற்றுக்கொடுத்தவைகளும் கத்தோலிக்க, கிறிஸ்துவ பாடசாலைகளே என்பதை ஏன் இவர்கள்மறந்துவிட்டார்கள்?

"பெற்றதாயைப் பழிப்பதைப்போலவே இவர்களின்போக்கு இருக்கின்றது. கல்விஅளித்தவர்களையும், கல்விஅளித்தபாடசாலைகளையும் தூற்றுவதா இவர்களின் கலாசாரம்? கலாசாரம், பண்பு, கொள்கை என்றெல்லாம் கூறுகிறவர்கள் கத்தோலிக்கபாடசாலைகளில் படித்ததை ஏன்மறந்துவிட்டனர் என்பது புரியவில்லை. எங்கள்பாடசாலைகளை இந்தஅரசாங்கத்தால்அல்ல, வேறு எந்தஅரசாங்கத்தாலும் எங்களிடமிருந்து பறிக்கமுடியாது என்பதைச் சம்பந்தப்பட்டவர்களிடம் நான்கூறவிரும்புகிறேன். இனிமேல் கட்டப்படும் பாடசாலைகளுக்கு அரசாங்கஉதவிகிடையாதென்று கூறுகின்றனர். இதனால் நஷ்டமடைபவர்கள் ஏழைப்பிள்ளைகளே. இன்றுதானும் சிறந்தபுத்தர்கள் தங்கள்பிள்ளைகளைக் கிறிஸ்துவ, கத்தோலிக்க உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளுக்கே அனுப்புகின்றனர். அங்கு ஒழுங்காகப் படிப்பிப்பதாலேயே பெற்றோர் தங்கள் பிள்ளைகளை இப்பாடசாலைகளுக்கு அனுப்புகின்றனர். எத்தனையோ அரசாங்கபாடசாலைகளில் பிள்ளைகள்இல்லாமல் இருப்பதை நாம்காண்கின்றோம். அதைப்போலவே, உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளை அரசாங்கம்எடுத்துக்கொண்டால், இனிப் புதிதாகக் கட்டப்படும் பாடசாலைகளுக்கு அரசாங்கம் உதவிசெய்ய மறுத்தால், நாளடைவில் இலவசக்கல்வித்திட்டம் மறைந்துவிடும்.

### புதியதிட்டத்தை எதிர்க்கவேண்டும்

"அரசாங்கஉதவியின்றிப் பாடசாலைகளை நடத்தினால் பிள்ளைகளிடம் கட்டணம்வசூலிக்க நேரிடும். அப்போது வசதியுள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளை அரசாங்கபாடசாலைகளுக்கு அனுப்புவதைவிடத் தனிப்பட்ட பாடசாலைகளுக்கே அனுப்பவிரும்புவார்கள். அதனால், இந்தநாட்டிலுள்ள பணக்காரப் பிள்ளைகளே நல்லகல்வியைப் பெறமுடியும். ஆகையால், இந்தப்புதிய திட்டத்தைப்பெற்றோர் அனைவரும் எதிர்க்க வேண்டும். இன்றேல், ஏழைகளின் பிள்ளைகள் பணக்காரரின் பிள்ளைகளுக்குக் கைகட்டிச் சேவகம்செய்ய நேரிடும்."

### இராஜரத்தின கூறுகின்றார்

"பிரதமர் பண்டாரநாயகா தனது தேர்தல்கால உறுதிமொழிகளை இவ்வளவுசீக்கிரம் மறந்துவிட்டது பெருமளவில் பரிதபிக்கத்தக்கதாகும். அவர் இப்பொழுது தமிழை நியாயமான அளவுக்கு உபயோகிக்க அனுமதியளித்து வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழில் நிர்வாகம் நடைபெறுவதற்குப் பாதையை ஆரம்பித்து வைத்துள்ளார். அவர் ஸ்ரீஎதிர்ப்புஇயக்கத்தை எதிர்த்து நடவடிக்கைஎடுக்கத் தைரியமற்றவராகஇருப்பது பெருமளவில் விசனிக்கத்தக்கதாகும்."

திரு. கே. எம். பி. இராஜரத்தின,
வெலிமடைத்தொகுதிப் பதவி
இழந்திருக்கும் எம். பி.

### இறுதிவெற்றி நமதே

"எமது உணர்ச்சிகளையும், குறைகளையும் தற்போதைய அரசாங்கம் நன்கு அறிந்திருக்கிறது. இரத்தஞ் சிந்தாமலும், எமதுசிங்களச்சகோதரர்களுக்குத் துன்பம்உண்டுபண்ணாமலும் கடைசிவரை போராடத் தீர்மானித்துவிட்டோம். நாம் அனுட்டிக்கப்போகும் சத்தியாக்கிரகம் உடனடியான வெற்றியைக் கொடுக்காமலிருக்கலாம். அக்காலத்தில் எத்தனையோ இன்னல்கள், இடைஞ்சல்களை நாம் எதிர்க்க வேண்டியிருக்கும். ஆனால், இறுதி வெற்றி நமதே. ஆகவே, எவ்விததுன்பத்தையும் சமாளிக்க நாம் தயாராயிருக்கவேண்டும்."

திரு. ரி. இராமநாதபிள்ளை,
பருத்தித்துறை.

---

● இந்தியாவிலே பூனாநகர கத்தோலிக்க சர்வகலாசாலையின் அதிபராக மகாவண. லோறென்ஸ் பெர்னாண்டெஸ் சுவாமியார் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். இவரே அந்நகரில் இருந்துவருகின்ற பாப்பரசர்குருமடத்தின் தலைவராகவும் பின்னரும்தொடர்ந்து கடமைபார்த்துவருவார்.

● பாப்பரசருக்கு ஓர் அன்பளிப்பாகப் பெல்ஜியதேச கத்தோலிக்க பத்திரிகாசிரியர்கள் 66,000 ரூபாவுக்கு மேல் உபகரித்திருக்கிறார்கள். இவர்களின் ஐக்கியசங்கம் இவ்விதம் வருடந்தோறும் உபகரிப்பது ஓர்வழமையாகும். இந்தப் பணத்தை விசேஷ தூதுக்குழு ஒன்று றோமாபுரி கொண்டு சென்று பாப்பரசருக்குச் சமர்ப்பிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



## அண்ணு சொல்லுவது :

**அருமைச்சகோதரங்களே !**

அன்று ஒருநாள் நான் புகையிரதத்தில் பயணஞ் செய்துகொண்டிருந்தேன். நான் போனவண்டிப்பகுதியில் இருவர் இருக்கக்கண்டேன். அவர்களுடன் அதிகங்கதைக்க முடியவில்லை. அங்குவேறெரு இளைஞர் வந்தார்.

வந்தவர் என்னைக் கண்டதும் புன்முறுவல் பூத்தார். நானும் பதிலுக்குச் சிரித்தேன். தான் போகும் இடத்தைக் கூறிவிட்டு யன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தார்.

சற்று நேரத்துக்குப்பின் நான் செபமாலையை எடுத்து மௌனமாகத் தியானித்தேன். றெயில் தரித்தது. எந்தஇடம்என்று அறிவதற்காக நான் திரும்பியபொழுது கடைசியாய் வந்தஇளைஞர் செபமாலை ஓதுவதைக் கண்டேன். அவருடன் கதைத்தேன. அவர் கொழும்பில் உள்ளவர் ; சிங்களர் ; அர்ச். ஆசீர்வாதப்பர் கல்லூரியில் படித்தவர். உத்தியோகத்துக்காக வவுனியாவுக்குப் போய்க்கொண்டிருந்தார். வவுனியாவரும்வரை பயணத்தை இன்பமாகக் களித்தோம். செபமாலை எமக்கு அன்புப்பிணைப்பு ஆயிற்று.

* * *

வைகாசி வணக்கமாதத்தை நீங்கள் பக்தியாக அனுசரிக்கிறீர்களென்று காணுகிறேன். மாலைகள் கோத்து மாதாவுக்குச் சூடுபவர் பலர். இயற்கைப் பூக்களால் மாதாவின்பீடத்தை அலங்கரிப்பவரும் உண்டு. உங்கள் உற்சாகம் தளரக்கூடாது.

இந்த மாதமுடிவில் மரியன்னை எங்கள் இராக்கினி, பரலோக பூலோக அரசிஎன்ற திருநாளை அனுசரிப்போம். நீங்கள் மாதாவின் பேரில் கீதங்கள்பாடிப் போற்றலாம். உங்களில் ஒருவரை வைகாசித்தலைவரெனத் தெரிந்து, அவரை மாதாவின் சுரூபத்துக்கோ, படத்திற்கோ முடிசூட்டச் செய்யலாம். இச்செய்கையால் மாதாஉங்கள் அரசிஎனக் காட்டுவீர்கள்.

அப்படியே சீவித்துவரப் பிரயாசப்படுங்கள்.

உங்கள் அன்புள்ள,
அண்ணு.

## தையும் வைகாசியும்

தையிலே

மழை பெய்தது ; மண் குடித்தது
நிலம் கீறினேன் ; விதை தூவினேன்
முளை எழுந்தது ; செடி வளர்ந்தது
நீர் வார்த்தேன் ; நான் காத்தேன்

வைகாசியிலே

தினமும் ஓடுவேன் ; மலர் தேடுவேன்
மலர்கள் சிரிக்கும் ; மணத்தைப் பரப்பும்
பூக்களைப் பறிப்பேன் ; புதுமாலை தொடுப்பேன்
என்ஆசைத் தாய்க்கு எந்நாளும் கொடுப்பேன்

— குழந்தை

இலக்கியம் 10

## மனக்கவலை மருந்து

இவ்வுலகம் ஒரு துன்பக்கேணி. இங்கு பசி, பிணி, பகையால் மக்கள் படுந் துயருக்கோரளவில்லை. இது 'துயரிலங்கும் உலகு.' இதனாலேயே, "மானுடவாழ்க்கை ஒன்றுகக் கருதிடின் கண்கள் நீர்பில்கும்" என்றனர் மூத்தோர். மனுதன் இன்பம் பெறுதற்குத் தேவையானவை செல்வமும், யாக்கையும், இளமையுமாம். இம்மூன்றும் ஒருங்கே இணைந்தாலன்றி இன்பப்பொருள்களைப் பெறவும், அனுபவிக்கவும் முடியாது. இவை ஒன்றுகூடினும் என்றும்நின்றுநிலைப்பனவோ என்றால் இல்லை.

**நீரிற்குமிழி இளமை ; நிறைசெல்வம் நீரிற்சுருட்டும் நெடுந்திரைகள் ; நீரில் எழுத்தாகும் யாக்கை என்று ஆன்றோர் அறிவுறுத்தினர்.** இன்பநுகர்ச்சிக் கருவிகளான இம்மூன்றும் நிலையற்றவையாயின் இன்பம் நிலையானதா ? எப்படி நிலையானதாக முடியும். எப்பக்கம் நோக்கினும் துன்பமும், துயரமுமே நம்மைச் சூழ்ந்துகிடக்கின்றன. கவலைக்கடலுள் நாம் மூழ்கிக்கிடக்கக் காண்கிறோம். இந்நிலையில் நாம் எவ்வாறு இவ்வுலகில் துன்பத்தை நீக்கலாம், கவலையைமாற்றலாம்என்று எண்ணி ஏங்கித் தவிக்கிறோம்.

எமதுஏக்கத்தை நீக்க, வள்ளுவர் ஒருநல்ல மருந்துதருகிறார். ஒப்புயர்வில்லாத தனிக்கடவுளின் திருவடிகளை நினைந்து நினைந்து பற்றுங்கள் உங்கள் மனக்கவலைமாறும் என்கிறார். அவருடைய சஞ்சீவிக்குறளை மேலேபடிப்போம்.

**தனக்குவமையில்லாதான் தாள்சேர்ந்தார்க்கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது,**

## வைகாசித் திங்களிலே

1. பூமி சுமந்தது தேன்மலர்
பொன்விளக் கேந்தினன் சூரியன்
பாடின இன்னிசைப் புள்ளினம்
பாலர்நாம் தாய்புகழ் வாழ்த்துவோம்

2. அழகொடு ஒளிவெள்ளம் தோய்ந்தது
அருவிநீரெனத் தென்றல் பாய்ந்தது
அழிவிலாக் கற்பலங் காரியை
அன்னையைப் பண்பாடி ஏத்துவோம்

3. தண்மதி நிலவுடை நெய்தது
தாரகை வைரங்கள் பெய்தது
பொன்னகர் இராக்கினிச் செல்வியைப்
பொங்குபே ரன்பொடு போற்றுவோம்

"ஜெயம்"

நகைச் சுவை

## எழுத்தாளனின் எதிரிடைகள்

— ஜெயராசா சந்திரசேகரா —

(சென்றவாரத் தொடர்ச்சி)

"அடே ராஜு ! இங்கே வந்துவிட்டுப் போடா" என்று அழைத்த அம்மாவின் குரலைச் சிரமேற்றுங்காது, "சீ ! இதென்ன தொந்தரவாயிருக்கிறது" என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டு அடுக்களைக்குப் புறப்பட்டான் ராஜு.

"லீவுநாட்களென்று தாய் தகப்பனுக்கு ஏதாவது உதவிசெய்வோமே என்ற கரிசனை இருந்தால்தானே இந்தப் பிள்ளைகளுக்கு..." என்று ஆரம்பித்த அம்மா, "வாடா இங்கே, பொரிக்கிறதுக்கு நெய் ஒருதுளிகூட இல்லை; சைக்கிளைஎடுத்துக்கொண்டு போய்க் 'கோவோ' நெய்யில் ஒரு போத்தல் வாங்கிவாடா" என்று முடித்தாள்.

"வெயிலாயிருக்கிறதே அம்மா !" என்று தயங்கினன் ராஜு.

"வெயிலாவது, மண்ணாங்கட்டியாவது. இந்த வெயிலிலே போய் விளையாடென்று சொன்னால், உனக்கு இது வெயிலாயிருக்காது ! 'ஐஸ்' கட்டியைத் தலையில் வைத்த மாதிரி இருக்கும் ! என்னடா ?" என்றாள் அம்மா.

"சரி என்ன செய்வது" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு கடைக்குப் புறப்பட்டான் ராஜு.

அம்மாவுக்கு நெய் வாங்கிவந்து கொடுத்துவிட்டுத் திரும்பவும் மேசைமுன் வந்து, முன்பு மனதில் உதித்த 'ப்ளொட்'டை விஸ்தரித்து எழுத உட்கார்ந்தான் ராஜு. ஒரு வரிகூட எழுதி முடித்திருக்க மாட்டான், அவன் அருமைஅக்கா "ராஜு ! " [illegible] று வாஞ்சையுடன் அழைக்கும் சத்தம் கேட்டது. ராஜு பேசாது உட்கார்ந்துவிட்டான். திரும்பவும் 'ராஜு' என்று அக்கா அழைக்கும் குரல் கேட்டது. பொங்கியெழும் சினத்தை அடக்கிக்கொண்டு எழுந்துபோய் அக்காமுன் நின்றான். அவள் தையல்மெஷின் முன் உட்கார்ந்துகொண்டு ஏதோ தைத்துக்கொண்டிருந்தாள். ராஜுவைக் கண்டதும் நீலநிற நூலில் ஒரு துண்டைக் கொடுத்து, "இந்த சாம்பிள் துண்டைக் [illegible]டி இதே நிறத்தில் ஒரு றீ[illegible]கட்டை வாங்கிக்கொண்டு வாடா, நல்லபிள்ளை அல்லவா !" என்றாள்.

அவ்வளவுதான், ராஜு வெகுண்டெழுந்தான். அடக்கப்பட்டிருந்த அவனுடைய கோபம் துள்ளியெழுந்தது.

"இதென்ன அக்கிரமம் ! இங்கே நான்தானா உங்கள் எல்லாருடையவும் வேலைக்காரன் ? பேசாமல் இருக்க, இருக்க நீங்கள் எல்லாரும் இடங்கண்டு விட்டீர்கள் ! தம்பி இல்லையா, றீல்கட்டை வாங்க ?" என்று ஏறிக்குதித்தான் ராஜு. "இன்றுடன் நானும் பார்த்துக்கொள்ளுகிறேன் ; உங்கள் உருட்டல், மிரட்டல்கள் எல்லாவற்றையும் ! ராஜுவை இனி ஒருத்தரும் அசைக்கமுடியாது !" என்று தன்னுடைய நெஞ்சில் ஓங்கி ஒரு குத்து விட்டான். பின்பு (வலித்ததுபோலும்) நெஞ்சை மெதுவாகத் தடவிக்கொண்டான். "நானும் பார்த்துக்கொண்டே வாறேன் ; எல்லாவற்றிற்கும் ராஜு இங்கேவாடா, அங்கே போடா என்றபடிதான் எப்போதும் இந்த வீட்டிலே !" ஒரு கதை எழுத ஒருநிமிஷநேரம் ஓய்வு கிடையாது" என்று மேலுஞ் சொல்லிவிட்டு மூச்சுவாங்க வெறிகாரன் போல நின்றான்.

இதற்குள் அப்பா, "என்னடா சத்தம் அங்கே ?" என்று சொல்லிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தார். இவ்வளவு நேரமும் சரமாரியாகச் சொற்பொழிவு கேட்டுக்கொண்டிருந்த வீட்டிலே பூரண நிசப்தம் நிலவியது. அடுத்த நிமிஷம் அக்காவுக்கு நீலநிற றீல்கட்டை வாங்க ராஜு கடையை நோக்கிச் சிட்டாய்ப் பறந்துகொண்டிருந்தான். ஆனால், அவன்மனமோ "எனக்கு ஏன் இப்படியெல்லாம் நடக்கவேண்டும் ?" என்று சலித்துக்கொண்டிருந்தது.

றீல்கட்டை வேலை முடிந்தபின் திரும்பவும் தனது மேசையை நோக்கி விரைந்தான். அங்கே ... ? ராஜுவின் சின்னத்தம்பி மைப்புட்டியை மேசைமீது கவிழ்த்துவிட்டுப் பேனாவை நிலத்திலே வைத்துக் குத்திக்கொண்டிருந்தான். அவனுக்கு அப்போது ஒன்றரை வயது. பேனாவின்முனை கிழிந்த பனங்கிழங்கைப்போல இரண்டாகப் பிளந்து போயிருந்தது. மேசையும், காகிதமும் மையால் அபிஷேகஞ் செய்யப்பட்டிருந்தன. ராஜு இவற்றைப் பார்த்துக்கொண்டு சிலையாக நின்றுவிட்டான். பிறகு அம்மா சாப்பிடக் கூப்பிடும்போதுதான். ராஜு பிரமை நீங்கிப் பூலோகத்துக்குத் திரும்பிவந்தான்.

சுபம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்பு

"பாதுகாவலன்" பத்திரிகையில் பிரசுரிக்கவிரும்பும் நன்றித்துதி முதலியனவற்றை "அண்ணு" வுக்கு அனுப்பவேண்டாம், அவைகளைப் "பாதுகாவலன்" அச்சக அதிபருக்கே அனுப்புங்கள்.

---

சாந்தியும், ஓய்வும் நிலையாத இடத்தில், நம்பிக்கை — அனைவருக்கும் வரும் நம்பிக்கை வந்தணைவதில்லை.

—மில்டன் (ஆங்கிலக்கவி)

## விற்பனவு

சுத்தமான இனக்கோழிகள் வாங்க விரும்புவோர் பெரியவிளானிலுள்ள "அசிசி லொட்ஜ்" எனும் இல்லத்தில் விசாரித்துக்கொள்ளலாம். வெள்ளை லெக்கோன், கறுத்த லெக்கோன், ஆர். ஐ. ஆர், ஒஸ்ரலொப், பவ்றொக், அன்கோணு, பிளிமத்றொக் முதலிய இனத்தில் குஞ்சுகள்முதல், முட்டையிடும் கோழிகள்வரை உண்டு.

S. J. இராசதுரை,
அசிசி லொட்ஜ்
பெரியவிளான்,
இளவாலை.





## அர்ச். பிலிப்புநேரியார் சரித்திரச் சுருக்கம்

திருச்சபையின் சிறந்த சுத்தவாளர்களில் ஒருவரும், உத்தம வேத போதகரும், சரீரம் அழியா வரம் பெற்றவரும், அற்புதங்கள் புரிபவருமான அர்ச். பிலிப்புநேரியார் சரித்திரச் சுருக்கம் வெளிவந்து விட்டது!

O

உருக்கமான அவருடைய வரலாறு ஒவ்வொரு கத்தோலிக்கர் கையிலும் இருக்க வேண்டிய பொக்கிஷமாகும். பிரார்த்தனை, மங்களம், பாட்டுகள் யாவும் அடங்கியுள்ள அலங்காரமான பதிப்பு.

விலை: சதம் 40.



கிடைக்கும் இடம்: கட்டளைக்குரவர், அர்ச். பிலிப்புநேரியார் கோவில், பத்தாவத்தை, இளவாலை.

(திருநாட் காலங்களில் செம்பியன்பற்றிலும், அல்லைப்பிட்டியிலும், மற்றும் அர்ச். பிலிப்புநேரியார் கோவில்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.)

---



## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

சகாயத்தாயாரினதும், அர்ச். பிலோமினம்மாளுடையவும் சகாயத்தினுல் நான் ஜி. சி. ஈ. பரீட்சையில் தேர்ச்சியடைந்தேன். நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன். இவர்களின்நாமம் ஸ்துதிக்கப்படுவதாக!

ம. பிலோமினு

* * *

திருஇருதயநாதரின் இரக்கத்தாலும், சதாசகாயமாதாவின் அற்புதத்தாலும், இன்னும் அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார் இவர்களின்வேண்டுதலாலும் எங்கள்பிள்ளைகளுக்கு வந்தவருத்தம்நீங்கியதற்காகவும், மற்றும்எங்கள்குடும்பத்திற்குச் செய்துவரும் உபகாரங்களுக்கு நன்றியறிதலாகவும் நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறோம். இவர்களின்நாமம் எங்கும்புகழப்படுவதாக.

பி. எஸ். மட்டக்களப்பு

* * *

யேசுவின் திருஇரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். செபஸ்தியார் இவர்களின் மன்றாட்டாலும் நான்நினைத்தகாரியம் பூர்த்தியானது. இதைநான்வெளிப்படுத்த 8மாதகாலங்களாய்ச் சுணங்கியதால் எவ்வளவோ துன்பங்களுக்குள்ளாகினேன். இவர்களின் நாமம் என்றென்றைக்கும் புகழப்படக்கடவது.

ஓர்ஊழியன், கொடிகாமம்.

* * *

சதாசகாயமாதாவின் இரக்கத்தாலும், திருஇருதயயேசுவின் இரக்கத்தாலும், அர்ச். றீத்தம்மாள், அர்ச். அந்தோனியார், மருதமடுஇராக்கினி இவர்களின்உதவியாலும் அடியேன் இருவருஷகாலமாகத் திடனுனநம்பிக்கையோடு தினமும் இரந்துகேட்டவையாவும் பூர்த்தியானதினுல், அடியேன் என்நன்றியைத் தெரிவித்துக்கொள்ள இதனைப்பகிரங்கப்படுத்துகிறேன். எனதுசகோதரியின் விவாகம் யாதொருதொந்தரவுமின்றி நடைபெற்றதற்கு உமக்குநன்றியறிந்த ஸ்தோத்திரம்.

அருமையான அன்னையே! உமதுநாமம் எங்கும்புகழப்படுதாக. ஆதரவற்றவர்களின் அன்னையே! அபயமென்றுவந்தோரை உமதுஅன்பினுல் அரவணைக்கும் தாயே! என்னையும், என்குடும்பத்தாரையும் இன்றும்என்றும் உமதுபாதுகாப்பில் வைத்துக்காப்பாற்றி, நான் திடனுனநம்பிக்கையோடு கேட்கிற யாவற்றையும் கெதியில்பூர்த்திசெய்ய உம்மைத்தினமும் வேண்டிக்கொள்கிறேன்.

T. R.

"மாலையின் அழகு மலர்களைப் பொறுத்தது; மக்களின் உயர்வு ஒழுக்கத்தைப் பொறுத்தது."

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 794**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம், உரும்பிராய்தெற்கு இளையதம்பி நடராசாலகம்பெண் ஞானதேவி — வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம், கைதடி சங்கரப்பிள்ளை மாணிக்கம் — எதிராளி.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3692/உம் இன்னும்ரூபா 3000/த்திற்கு 6-2-56 தொடக்கம், 19-4-56 வரையும் 100-க்கு 9% வட்டியும், பின் கூட்டுத் தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100-க்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு 217ரூபா 92 சதமும்.

யாழ்ப்பாணம், டிஸ்திறிக்கோட்டின் M. B. 794-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1957-ஆண்டு ஆடிமாதம்5-ந்திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி, கோப்பாய் கோயிற்பற்றுக் கோப்பாய்தெற்குஇறைநெய்த்தலவுடை பா. நில. இல. 27. எல்லை: கிழக்கும், தெற்கும் [illegible] — கே. கதிரவேற்பிள்ளை ஆதனம். மேற்கு — எஸ். ஆறுமுகத்திற்கும், கதிரவேலுகைம்பெண் தையல்நாயகத்திற்கும் உரியஆதனம். வடக்கு — சுப்பன்பெண் நாகிற்கும், பங்காளருக்கும்உரியஆதனம். இதடங்கலும்.

பின்னுல்விபரிக்கப்படும் ஐந்துதுண்டுக் காணிகள் 1957-ம்ஆண்டு ஆடிமாதம் 6-ந்திகதி சனிக்கிழமைமுற்பகல் 10மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

### காணிகள் விபரம்

1. வடமாகாண[illegible]யாழ்ப்பாணடிஸ்திறிக் தென்மராட்சிப்ப[illegible]தி நாவற்குளிக் கோவிற்பற்று, கைதடிஇறை. மூர்த்தியாவத்தைபுலம் தோட்டம் நி. இல. 6-உம். எல்லை: கிழக்கு — சங்கரப்பிள்ளைபெண் சிவபாக்கியத்திற்கும், மறுபேருக்கும் உரியஆதனம். வடக்கு — சோமலிங்கம் பெண் சிவக்கொழுந்துவிற்கும், பங்காளருக்கும்உரியஆதனம். மேற்கு — யோகத்தாரின் உரிமைக்காரரின் ஆதனம். தெற்கு — எஸ். தம்பிப்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரியஆதனம். இதடங்கலிலும், இதற்குச் சேர்ந்தவைகளிலும் சொரியலாய் $\frac{1}{3}$பங்கும், வடகிழக்குமூலையில் இருக்கும்கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழமையான வழிவாய்க்கால் உரித்தும்.

2. ஷை கைதடிஇறை மூர்த்தியாவத்தைபுலம்தோட்டம் பா. நி. இல. 5-உம், குளி $3\frac{1}{2}$-யும், பனைகளும். எல்லை: கிழக்கு — மேலேசொல்லப்பட்ட அடுத்தகாணி. வடக்கு — எஸ். காசிப்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரியகாணி. மேற்கு — சுப்பர் முருகேசரின் ஆதனம். தெற்கு — எஸ். காசிப்பிள்ளை ஆதனம். இதடங்கலிலும், இதைச்சேர்ந்தவைகளில் சொரியலாய் மூன்றில்ஒருபங்கும் ($\frac{1}{3}$) வடகிழக்குப்பக்கத்தில் இருக்கும்கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழமையான வழிவாய்க்கால் உரித்தும்.

3. ஷை கைதடிஇறைமூர்த்தியாவத்தைபுலம்தோட்டம் பா. நி. இல. 6. எல்லை: கிழக்கு — சந்திரசேகரரின் உரிமைக்காரரின் ஆதனம். வடக்கு — சங்கரப்பிள்ளை பெண் சிவபாக்கியத்திற்கும், மறுபேருக்கும் உரியஆதனம். மேற்கும், தெற்கும் — ஆறுமுகம் மார்க்கண்டருக்கும், மறுபேருக்கும் உரியஆதனம். இதடங்கலிலும், இதைச்சேர்ந்தவைகளிலும் சொரியலாய் மூன்றில் ஒருபங்கும், மேற்குப்பக்கத்தில் இருக்கும்கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழமையான வழிவாய்க்கால் உரித்தும்.

4. ஷை கைதடிஇறை மூர்த்தியாவத்தைபுலம்தோட்டம் மறுபிரிவுகளும், பா. நி. இல. 9-உம், கிணற்றுப்பங்கும். எல்லை: கிழக்கு — எஸ். தம்பிப்பிள்ளைக்கும், மறுபேருக்குமுரியஆதனம். வடக்கு — எஸ். காசிப்பிள்ளைக்கும், மறுபேருக்கும் உரியஆதனம். மேற்கு — எம். சரவணமுத்துவிற்கும், மறுபேருக்கும் உரியஆதனம். தெற்கு — அகிலேசர்பெண் யோகத்தாருக்கும், மறுபேருக்கும் உரியஆதனம். இதடங்கலிலும் இதைச்சேர்ந்தவைகளிலும் சொரியலாய் ஆறில் ஒருபங்கு.

5. ஷை கைதடிஇறை மூர்த்தியாவத்தைபுலம்தோட்டம்பா. நி. இல. $4\frac{1}{4}$-உம், செய்பயிர், வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — கற்காணி. மேற்கு — எஸ். சின்னையாவின் உரிமைக்காரரின் ஆதனம். தெற்கு — எஸ். கதிர்காமருக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம். இதட[illegible]கலிலும், இதைச்சேர்ந்தவைகளிலும் செ[illegible]ரியலாய் அரைவாசி.

24 சப்பெல்வீதி, யாழ்ப்பாணம்.
செ. இரத்தினசபாபதி, கொம்மிஷனர்.
17-5-57

---

● பர்மாவிலே மண்டலேநகருக்குத் தென்மேற்கே அறுபது மைல் தூரத்திலுள்ள மொனயாநகரில் சென்ற 8-ந்திகதிஏற்பட்ட பெரியதீவிபத்துஒன்றிலே பதினுயிரம்வீடுகளுக்குமேல் எரிந்து நாசமடையலாயின. அதனுல் 37லட்சத்து 50ஆயிரம்ரூபாபெறுமதியான பொருட்கள் சேதமடைந்திருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

---

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை மாதாந்தக்கூட்டம் 25-ம்தேதி சனிவாரம் பி. ப. 4-30மணிக்குச் சஞ்சூசையப்பர் சிற்றுலயத்தில் நடந்தேறும். சகோதரர் சகோதரிகள் நேரகாலத்தோடு அதற்குச் சமுகங்கொடுக்குமாறு தயவாய்க் கேட்கப்படுகின்றனர்.

A. S. FRANCIS OF MARY,
சபைக்கர்த்தருக்காக

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 23-1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org